செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

| சிலம்பு | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௩, ஆனி | பரல் |
| --- | --- | --- |
| ௩௬ | ஜூலை, 1962 | ௧௧ |

# மறைமலையடிகள் கலைமன்றத் திறப்புவிழா

இருபதாம் நூற்றாண்டில் இணையற்ற தமிழ்ப்புலவர் மன்னராய்ச் செந்தமிழ் மொழிக்கும் சிவனெறிக்கும் சீரிய ஒப்பில் ஒருபெரு நற்றாணாய்த் திகழ்ந்து தனித்தமிழியக்கத்தைத் தோற்றுவித்தும், தமிழில் ஆராய்ச்சி நூல்களும், கட்டுரை, கவிதை, உரை, திறனாய்வு, நாடகம முதலிய பல்வகை இலக்கியத் துறை நூல்களும் நாற்பதுக்கு மேல் எழுதியும், இந்தியை எதிர்த்துப் பெருங்கிளர்ச்சிகள் செய்தும் தமிழ்மொழித் தனிக் காவலராய் விளங்கியவர் மாப்பேரறிஞர் மறைத்திரு மறைமலையடிகள் ஆவர். சாவடித் தெருவிலுள்ள அவர் மாளிகையைத் தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம் வாங்கிப் பொதுமக்கள் எல்லாரும் கண்டுகளித்துப் பயன் எய்துமாறு இப்பொழுது பெரும்பொருட் செலவில் செம்மைப்படுத்தியுள்ளனர். அதன் திறப்புவிழா 12-7-1962 வியாழக்கிழமை மாலை 6-15 மணிக்குத் துவங்கப்பட்டது. விழாவிற்கு மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் திருவருட்டிரு சோமசுந்தர ஞானசம்பந்த அடிகளார் தலைமைபூண்டனர். தமிழ்நாட்டுக் கல்வி நிதியமைச்சர் உயர்திரு எம். பக்தவத்சலம் அவர்கள் திறந்து வைத்தனர்.

கலைமன்றத்தின் மேன்மாடியின்கண் அடிகளார் நாளும் வழிபட்டுவந்த அம்பலவாணர், அம்மை, நால்வர் திருவுருவங்கட்குச் சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது. அதனைத் தலைவர், அமைச்சர் பெருமக்கள் அனைவர்களும் கண்டு வணங்கினர். பின் விழா அரங்குக்கு வந்தனர் இறைவணக்கத்தோடு விழாத் தொடங்கப்பட்டது. கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள வரவேற்புரை நிகழ்த்தினர். திறப்புரையாற்றிய

அமைச்சர் அவர்கள் மேனுட்டினரைப்போலவே பேரறிஞர்களை யும், தமிழ்த்தொண்டு செய்தவர்களையும் என்றும் நினைந்து போற்றுவதற்குத் தமிழர்களும் அரசினரும் இப்போதுதான் அக்கறைகாட்டி வருகின்றனர் என்றும், விடாமுயற்சியுடன் தமிழ்ப்பணி புரியும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரின் ஆட்சியிலுள்ள சைவசித்தாந்த சங்கம் அடிகளாரின் மாளிகையை வாங்கிச் சேக்ஸ்பியரின் வளமனையைப் போலப் பொதுமக்கள் கண்டு மகிழும் வண்ணம் கலைமன்றமாக்கியிருப்பது மிகவும் போற்றத்தக்கதாகும் என்றும் குறிப்பிட்டார்.

விழாவிற்குத் தலைமைதாங்கிய அடிகளார் அவர்கள் மறைமலையடிகளின் ஆராய்ச்சி மாண்பினையும் அறிவியல் முறைப் படி மனிதர்கள் இறந்தபின் வாழும் நிலையைப்பற்றி ஆராய்ந் துரைத்த திறத்தையும் போற்றிப் புகழ்ந்தார்.

விழாவில் சிறப்புரையாற்றிய டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார் எம்.எல்.சி அவர்கள் மறைமலையடிகள் தமிழில் பெருவாரியாக வழங்கப்பட்டு வந்த வடசொற்கள் எல்லா வற்றையும் நீக்கித் தூய தமிழில் இனிய தமிழ்நடையில் நூல்களை ஆக்கினர் என்றும், தேசிய ஒருமைப்பாடு என்பது மனஉணர்ச்சி ஒன்றுபடுதலினுன் உண்டாகுமேயன்றிப் பிறமொழிச் சொற்களை ஒரு மொழிக்கண் வற்புறுத்தி வழங்கச் செய்வதனல் உண்டா காது என்றும், அவ்வாறு ஒரு பொதுமொழி இந்திய நாட்டின் பிற மாநிலமொழிகளை ஆதிக்கஞ் செய்வதால் எக்காலத்தும் தேசிய ஒருமைப்பாடு ஏற்படாது என்றும் கூறினர். மேலும் பாடப்புத்தகங்களில் எல்லாம் கூடுமானவரை பிறமொழிச் சொற்களைச் சேர்ப்பதனுலும், தொல்காப்பியத்திலும் தேசியக் கவிஞர்கள் பாடிய பாட்டுக்களிலும் அடிக்கடி வரும் தமிழ்நாடு, தமிழ்மொழி என்பவற்றை நீக்குவதாலும்தான் தேசிய ஒருமைப் பாடு ஏற்படும் என்ற நிலையை அடியோடு போக்க முயல்வதுதான் நாம் தனித் தமிழ்த்தந்தைக்குச் செய்யும் நன்றியாகும் என்ருர். திரு. ச. சிவகுமரன், எம்.ஏ., அவர்கள் அடிகளார் தாம் உண்மை யென ஆய்ந்து கண்டவற்றை எதிர்ப்பு நேரினும் அஞ்சாது உரைக் கும் திண்ணிய நெஞ்சம் வாய்ந்தவர் என்று குறிப்பிட்டார்.

கழக ஆட்சியாளர் திரு வ. சுப்பையாபிள்ளை அவர்கள் கலைமன்றத்தை நிறுவப் பொருளுதவி யளித்த மத்திய அரசு, மாநில அரசுகளுக்கும், அவையோர்க்கும் நன்றிநவில இறை வாழ்த்துடன் விழா இனிது முடிவுற்றது.

விழா நிகழ்ச்சியின் முழுவிளக்கமும், வாழ்த்துச் செய்தி களும், விரிவாக வரும் செல்வி இதழில் வெளிவரும்.

# கால்டுவெல் தொல்காப்பியம் கற்றிருந்தால்...

[திரு. மு. சதாசிவம், எம்.ஏ.]

கிறித்துவ மதத்தைப் பரப்புவதற்காகச் சென்ற நூற்றுண்டின் தொடக்கத்தில் ஐரோப்பாவிலிருந்து தென்னுடு போந்த கால்டுவெல் பாதிரியார், தென்னகத்தில் அம் மதத்தைப் பரப்பியதைக் காட்டிலும், பிறநாடுகளில் தமிழ்மொழியின் பெருமையினை மிகப் பெரிதும் பரப்பியிருக்கிறுர் என்பது உண்மை. இப்போது அறியப்படும் தமிழக வரலாற்றுக் காலம் முதல் தமிழகத்தில் எத்துணையோ மதங்கள், சமயங்கள் புகுந்து வளர்ந்து மறைந்திருக்கின்றன. ஆனுல் கொள்கை வேறுபட்ட பல்வேறு சமய நெறிகளைச் சார்ந்த எல்லோரும் தம் சமயப்பற்றுடன் தமிழ்ப் பற்றும் கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் சமயத்தை வளர்க்க முற்பட்டபோதெல்லாம் தமிழையும் வளர்க்க முயன்றிருக்கின்றனர். முற்காலத்தில் சமணர்களும், பௌத்தர்களும, சைவர்களும், வைணவர்களும் தமிழை வளர்த்தது போலவே பிற்காலத்தில் முகமதியர்களும், கிறித்துவர்களும் தமிழ்ப்பணி செய்திருக்கின்றனர்.

உலகத்துப் புறப்பற்றுக்களை எல்லாம் விட்டொழித்த குமரகுருபரர், சிவப்பிரகாச சுவாமிகள், இராமலிங்க அடிகளை முதலியோராலும் தமிழ்ப்பற்றை விட்டுவிட முடியவில்லை. அத்தகைய அருளாளர்கள் தமிழ்ப்பற்றும் கடவுட்பற்றும் ஒன்றே என்று கருதி வாழ்ந்தனர். கடவுளை யடைதற்குத் தமிழே சிறந்த துணையெனப் போற்றித் தமிழை வளர்த்தனர். தமிழகத்திற்குப் பிற சமயங்களைப் பரப்புதற்காக வந்தோரும் தங்கள் சமயங்களைப் பரப்புதற்குச் சிறந்த கருவி தமிழ் என்று அறிந்து அதற்காக மட்டும் தமிழின்பால் பற்றுக் கொள்ளாது, தமிழின் இயல்பான சிறப்பியல்புகளையும், எளிமையையும், இனிமையையும், அருமையையும் உணர்ந்தும் தமிழ்க் காதல் கொண்டனர்.

தமிழகத்தில் வாழ்வோர் ஒன்று கடவுட்பற்றுக் கொண்டிருக்க வேண்டும் (அதனுல் தமிழ்ப்பற்றுத் தானே ஏற்படும்), அல்லது தமிழ்ப்பற்றுக் கொண்டிருக்க வேண்டும். இவ்விரு பற்றுக்களில் ஒன்றும் இல்லாதவர் தமிழர் என்ற நாமங்கொண்டு உழலுதல் தகாது.

சிறப்புடையவற்றையெல்லாம் தெய்வத்தோடு ஒப்பக் கொளல் வேண்டு மென்பது திருவள்ளுவர் தம் கொள்கை. அம் மரபு பற்றியே தமிழானது தமிழ் மக்களால் படைக்கப்பட்ட

மொழியேயாயினும், அதன் அரும்பெருஞ் சிறப்புக்களைக் குறித்து அதைத் 'தெய்வீக மொழி' என்று போற்றுகிறோம். தமிழின் அமைப்பும் அழகும் அறியுந்தொறும் ஆராயுந்தொறும் வியப்பும் இன்பமும் அளப்பிறந்தளிப்பனவாயுள்ளன. கால்டுவெல் பாதிரியாரைப் போன்றே கிறித்துவ சமயத்தைப் பரப்பத் தமிழகம் போந்த ஜி. யு. போப், வீரமாமுனிவர், சீகன்பால்கு ஐயர் முதலியோர் தமிழ்ப்பற்றுக் கொண்டும், தமிழ்மொழிக் கடிமையாகியும், தமிழ் கற்றதனால் தங்கள் பிறப்புப் பெரும்பய னுற்றதெனக் கருதியும் மகிழ்ந்தனர்.

கால்டுவெல் அவர்கள் தமிழ்நாட்டில் ஏறக்குறைய நாற்ப தாண்டுகள் தங்கித் தமிழ் பயின்று தமிழின்மேல் அளவிலாக் காதல் கொண்டவர். தமிழ்மொழியின் சிறப்புக்களையும் இயல்பு களையும், அவரைப்போல அவ்வளவு விரிவாகவும் விளக்கமாகவும், தெளிவாகவும் திட்பமாகவும் எடுத்துரைத்தவர் அவருக்கு முன்பு யாருமே இல்லை என்றே சொல்லலாம். தமிழின்பத்தில் தோய்ந்து நின்று தமிழைப்பற்றி ஆராய்ச்சி செய்து வந்தபோது அவர் தமிழைப் படைத்த தமிழர்களின் நுண்ணறிவுத் திறனையும் தம் நூலின் பலவிடங்களிலும் பாராட்டிக் கூறியிருக்கிறார்.

தமிழின் சிறப்பை உணர்ந்த பேரறிஞர் கால்டுவெல் தமிழோடு தொடர்புடைய பிற திராவிடமொழிகளையும் பற்றி ஆராய்ந்தார். திராவிடமொழிகள் என்றழைக்கப்படுபவை ஒரு தனி மொழிக் குடும்பமாகக் கருதத்தகும் சிறப்புப் பெற்றவை என்றும், அவை வடமொழியினின்று பிறந்தவையல்ல என்றும், திராவிடமொழிகளுள் தமிழே தொல் பழமையுடையது என்றும் எவரும் மறுக்க முடியாத வகையில் உலகிற்கு எடுத்துணர்த்தி இன்னும் பல மொழியுண்மைகளையும் நிலைநாட்டினார்.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியங்களையும் மறந் திருந்தனராதலின், தமிழகத்தில் பல்லாண்டுகள் தங்கியிருந்தும் கால்டுவெல் அவற்றைப்பற்றி ஒன்றும் அறியாதவராகவே வாழ்ந்து தமிழாராய்ச்சி செய்ய நேர்ந்தது. நன்னூல் என்ற சின்னூல் ஒன்றே கால்டுவெல்லுக்கு இத்துணைத் தமிழ்ப்பற்றையும் ஊட்டி அவர்தம் ஆராய்ச்சியையும் வளரச் செய்தது எனில், பழமை யும் பெருமையும் நனிபடைத்த தொல்காப்பியம் அவர் கண்ணில் பட்டிருந்தால் இன்னும் எத்துணையளவு அவருடைய மொழி யாராய்ச்சி விரிவடைந்திருக்கும்! இன்னும் எத்துணையளவு தமிழின் தொன்மையினையும் சிறப்பினையும் தமிழரின் ஒள்ளறி வினையும் எடுத்துப் பறைசாற்றி யிருப்பார்! என்று எண்ண வேண்டியவராயிருக்கிறோம்.

ஒரு மொழியைப்பற்றி ஆராய்ச்சி செய்குநர்க்கு அம்மொழியின் பழைய இலக்கியங்கள் இன்றியமையாத் துணைக் கருவிகளாகும். குறிப்பாகத் தமிழ்மொழியின் வரலாற்றையோ, இயல்பையோ ஆராய்ந்தறிய விரும்புவோர் தொல்காப்பியத்தையோ, சங்க இலக்கியங்களையோ சிறிதும் புறக்கணிக்க முடியாது; கூடாது. ஏனெனில் பண்டைத் தமிழின் தனித் தன்மைகளையெல்லாம் தெற்றென உணர்தற்கு அவையே உற்ற நற்கருவிகளாய் உள்ளன. வடமொழிச் சொல் ஒன்றுகூடக் கலவாத பாடல்கள் சங்க இலக்கியங்களில் நூற்றுக்கணக்கில் காணப்படுகின்றன. இதனைக் கால்டுவெல் உணர்ந்திருந்தால், "முடிந்தால் வடசொற்களை முற்றிலும் நீக்கிவிட்டுச் சிறப்புடன் மிளிரும்" (கால்டுவெல் ஒப்பிலக்கணம்: ஆங்கில மூலநூல் பக்கம் 47) என்று உரைக்க முற்படாது, "தமிழ் வடசொற் கலவாது பண்டு தொட்டே இயங்கிய மொழியே; தமிழர் விரும்பின் என்றும் வடசொற்களின்றி இயங்கவும் வல்லதாகும்" என்று சான்று காட்டி நிறுவிப்போந்திருப்பர்.

தமிழ்மொழி வரலாறும் தமிழக வரலாறும் வெளிப்படாக் காலத்தில் வாழ்ந்த கால்டுவெல் தம் நுண்ணறிவாராய்ச்சியால் தமிழைப்பற்றி ஆராய்ந்து கூறிய பல செய்திகள் இன்றும் முற்றிலும் உண்மையாக விளங்கக் காண்கிறோம். தொல்காப்பியமும், சங்கவிலக்கியங்களும் அவர் கைக்கு எட்டியிருப்பின் இவ்வுண்மைகளைக் கண்டுபிடிக்கவோ அல்லது சான்றுகாட்டி நிறுவவோ அவர் தம் வாழ்நாளின் பாதிக்காலத்தைச் செலவிட்டிருக்கவேண்டியிருந்திருக்காது!

தொல்காப்பியமும் சங்கவிலக்கியங்களும் அறிந்திராத காரணத்தால் கால்டுவெல் அக்காலத் தமிழ்ப் புலவோர் பலரும் நம்பியவாறே தாமும் பல செய்திகளை நம்பித் தம் நூலில் குறித்துள்ளார். சிலபோது சில தமிழ்ச் சொற்களை வடசொற்களே என்று அக்காலத்தில் பல தமிழ்ப்புலவோரும் ஒருமுகமாகக் கூறியபோது கால்டுவெல்லின் மனம் அவை தமிழ்ச்சொற்களாகத்தான் இருக்கவேண்டும் என்று உணர்ந்தாலும், பழந்தமிழ் நூல் வழக்குச் சான்று கிடைக்கப் பெறுமையின் அறிவுமிக்க தமிழ்ப் புலவர்களின் கொள்கையை அவரும் ஏற்றுக்கொள்ள நேரிட்டது. அவ்வாறு அவர் தம்காலப் புலவர்களின் வழிநின்று ஏற்றுக் கொண்ட செய்திகளுள் இக்கால ஆராய்ச்சியாளர் தவறெனக் கொள்ளும் சில குறிப்புக்களை இக்கட்டுரையின்கண் எடுத்துக்கூற விழைகின்றேன்.

1. கால்டுவெல் தம் நூலின் தொடக்கத்தில் 'தமிழ்' என்ற சொல் நம்மொழிக்கு எப்பொழுது எவ்வாறு வந்தது என்பதுபற்றி

ஆராய்கின்றார். அவர் காலத்தில் தமிழ்மொழியைத் 'திராவிட' என்ற சொல்லால் வடமொழியாளரும், பிறமொழியாளரும் வழங்கி வந்தனர். 'திராவிட' என்ற சொல்லிலிருந்தே 'தமிழ்' என்ற சொல் பிறந்திருக்கவேண்டும் என்று அக்காலத்துப் புலவர்கள் பலரும் திண்ணமாகக் கூறினர். இவ்வளவு சிறந்த அறிவு படைத்த தமிழர் பிறர் சூட்டிய பெயரான 'திராவிட' என்ற சொல்லால் தம்மொழியை அழைத்துக் கொண்டு வந்திருப்பரோ என்று கால்டுவெல் ஐயமுற்றார். 'தமிழ்' என்ற சொல் சங்க இலக்கியங்களில் பலவிடங்களிலும் வந்திருப்பதை அறியாத நிலையில் அவர் மனம் மயங்கியது. அதனால் 'தமிழ்', 'திராவிட' என்ற இருசொற்களுக்கும் மூலம் ஒன்றே என்று முடிவு காட்டுகிறார் (பக்கம் 8).

"தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின்
மகிழ் நனை மறுகின் மதுரையும்"

என்ற சிறுபாணாற்றுப்படை அடிகளை (௬௬ - ௬௭)க் கண்ணுற்றிருப்பின் கால்டுவெல்லுக்குத் தமிழ் என்ற சொல் பழமையானதா, 'திராவிட' என்ற சொல் பழமையானதா என்ற ஐயம் தோன்றியிருக்காது. தமிழ் என்ற அழகிய சொல்லைத் திரித்து வடமொழியாளர் திராவிட என்று வழங்கினர் என்பதை எளிதில் உணர்ந்திருப்பார்.

2. அவர் காலத்தில் பாண்டிய, சோழ, கேரள என்ற சொற்கள் வடசொற்கள் என்றே எல்லாராலும் கருதப்பட்டன. அவற்றைத் தமிழ்ச் சொற்கள் என்று நிலைநாட்ட அவர்க்குச் சான்றுகள் கிட்டவில்லை. அதனால், "அச்சொற்கள் வடமொழி யகராதிகளில் காணப்படுவனவாயும், தம் காலத் தமிழ்ப்புலவர் களாலேயே வடசொற்களே என்று ஒப்புக்கொள்ளப்படுவன வாயுமிருப்பினும், அவற்றின் மூலப்பொருள் வடமொழியில் சிறிதும் அறியக்கூடவில்லை" என்று தெரிவிக்கிறார்; (பக்கம் 9). வேறு வழியின்றி அவை வடசொற்கள் என்ற கருத்துக்கு உடன் படுகிறார் (பக்கம் 8). அவர் கைக்குச் சங்க இலக்கியங்கள் கிடைத்திருப்பின், பிறப்புக்காலந் தொட்டு மேம்பட்டு வரும் இக்குடிப் பெயர்கள் தனித்தமிழ்ப் பெயர்களே என்று ஐயமறத் தெளிந்திருப்பார்.

3. அக்காலத் தமிழ்ப்புலவர்கள் ஒவ்வொரு சொல்லுக்கும் (வடமொழியில் வழங்கப்படும் தமிழ்ச் சொல்லுக்கும்) வடமொழி மூலம் கண்டுபிடித்துக் கூறும் விருப்பினராயிருந்தனர் என்று கால்டுவெல் கூறுகிறார் (பக்கம் 10). அவர்கள் கூடத் 'தமிழ்' என்ற சொல்லுக்கு வடமொழியில் வேர்ப்பொருள் கண்டு பிடித்துக் கூறமுடியாது திகைத்தனராம். திராவிட என்ற

வடசொல்லின் தற்பவ உருவமே 'தமிழ்' என்றனராம். ஆனால் தமிழ் என்பதற்கு இனிமை அல்லது மணம் என்ற பொருளைக் கூறினர். எனினும் அப்பொருள் எவ்வாறு அச்சொல்லினின்று பெறப்பட்டது என்பது தமக்கு விளங்கவில்லை என்று அவர் விளம்புகிறார் (பக்கம் 11).

4. 'பாண்டிய' என்ற சொல் வடமொழியிலும் காணப் படுவதாலும், அது வடசொல்லே என்று அக்காலத் தமிழ்ப் புலவர்கள் பலரும் வாதிட்டு நின்றமையானும், கால்டுவெல்லும் அதை வடசொல்லென்றே ஏற்க முற்பட்டார் (பக்கம் 12). 'பண்டு' (பழமை) என்ற தமிழ்வேர்ச் சொல்லினின்று பிறந்தது 'பாண்டிய' என்ற சொல் என்று கூற அவர் மனம் விழைந் தாலும், அக்காலப் புலவர்கள் கூறியபடி பாண்டவர்களின் தந்தையாகிய 'பாண்டு' என்ற சொல்லினின்று பிறந்த சொல் என்றே கால்டுவெல் நம்பவேண்டியிருந்தது. அதற்கேற்றாற் போல் காத்தியாயனர் எழுதிய வடமொழி இலக்கணத்திலும் இப்படியே கூறப்பட்டிருப்பதாக மாக்ஸ்முல்லர் கால்டுவெல் லுக்கு உணர்த்தியிருந்தாராம்.

தொல்காப்பியர் காலத்திலேயே எண்ணிலாத் தமிழ்ச் சொற்களுக்கு வேர்ப்பொருள் அறியப்பட முடியவில்லை என்பது,

"மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா"

என்ற தொல்காப்பிய நூற்பா அளஎ இலிருந்து உணரப்படும். எனவே கல், மண், மரம் முதலிய இடுகுறிப் பெயர்கள் போலவே முடியுடை மூவேந்தரின் குடிப்பெயர்களும் வேர்ப்பொருள் அறியப்படா இடுகுறி இயற்பெயர்களே என நாம் கோடல் தவறாகாது மேலும் பாண்டுவின் புதல்வனான அருச்சுனன் பாண்டியரின் மகள் ஒருத்தியை மணந்ததாகக் கூறும் கதை ஒன்று பாரதத்திற் கூறப்படுகின்றமையின், பாண்டியர் பாண்டுவின் வழிமரபினர் என்று கோடல் பொருந்தாதொழிகிறது. வடநாட் டரசன் பாண்டுவின் காலத்திலேயே தென்னாட்டில் பாண்டிய மரபொன்று அவ்வளவு விரைவில் ஏற்பட்டிருக்க முடியும் என்று நம்புவது முடியாததாயுள்ளது.

5. 'சோழ' என்ற சொல்லின் மூலப்பொருளும் அறியக் கூடவில்லை என்று கால்டுவெல் மொழிகிறார் (பக்கம் 50). அவர் 'பதிற்றுப்பத்தைக்' கேள்விப்பட்டிருந்தால் 'கேரள' என்ற சொல் தமிழ்ச் சொல்லான சேர(ல) என்ற சொல்லினின்றே திரிந்திருக்கவேண்டும் என்று ஐயப்பாடில்லாது உணர்ந்திருப்பார்.

6. செயப்படு பொருளை எழுவாயாக அமைத்துக் கூறப் படும் செயப்பாட்டுவினை திராவிட மொழிகளில் இல்லை என்று

கால்டுவெல் கூறுவது (பக்கம் 50) உண்மையன்று. சங்க இலக்கியங்களிலும் செயப்பாட்டு வினைச் சொற்றொடர்கள் பலவிடங்களிலும் பரந்து காணப்படுகின்றன. ஆனால் தமிழர்கள் செயப்பாட்டு வினையைச் செய்வினையிலேயே ஆற்றல் தோன்றக் கூறும் பண்பை வளர்த்து வந்திருக்கின்றனர் என்பதே உண்மை. தமிழரின் இப்பண்பை உணர்ந்தே தொல்காப்பியர்,

"செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே" (நூற்பா : எ௩௧)

என்று கூறியுள்ளார். இதனைக் கால்டுவெல் அறிந்திருப்பின் திராவிட மொழிகளில் செயப்பாட்டுவினை இல்லை என்று ஒரு முகமாகக் கூறியிருக்கமாட்டார்.

7. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பெகிஸ்டன் பட்டயங்களைக் கொண்டு சிததியன்மொழிக் குடும்பத்தையும், திராவிடமொழிக் குடும்பத்தையும் ஆராயப் புகுந்த (பக்கம் 65) கால்டுவெல் ஏறக்குறைய அதே காலத்தில் எழுந்தவையாக இக்காலத்தில் பலராலும் கருதப்பெறும் தொல்காப்பியம், சங்க இலக்கியப் பாடல்கள் இவற்றைத் தம் ஒப்பீட்டாராய்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டிருப்பின், அவர் அவ்வாராய்ச்சியை விளக்கமுறச் செய்து தாம் கண்டுணர்ந்த உண்மைகளை இன்னும் திறம்பட நிலைநாட்டியிருப்பர் என நம்பலாம்.

8. தமிழில் வடசொற்கள் புகுந்த காலம் சமணர்கள் தமிழில் நூல்செய்யப் புகுந்த காலம்; அதாவது கி. பி. 9 ஆம் நூற்றாண்டு என்றும், திருக்குறளும் சிந்தாமணியும் அந்தக் காலத்திலே தோன்றியவையே என்றும் கருதுகிறார் (பக்கம் 84). அவர் தொல்காப்பியத்தைக் கற்றிருப்பின், தொல்காப்பியர் காலத்திலேயே அல்லது அவர் காலத்திற்குச் சிறிது முன்பிருந்தே தமிழில் வடசொற்கள் கலக்கத் தலைப்பட்டன என்பதை அறிந்திருப்பர். தமிழிலக்கிய வரலாறு நன்கறியப்படாமையின் அவர் திருக்குறளின் காலம் 9 ஆம் நூற்றாண்டு என்று பிழைபட உணர நேரிட்டது என்று எண்ணவேண்டியிருக்கிறது.

9. தமிழின் தொல்பழமையை விளக்க வந்தவிடத்து (பக்கம் 85) அவர்க்கு மிகப்பழந் தமிழாகக் கிடைத்தவை கல்வெட்டுக்களே. தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதலியவை தமிழகத்தில் இக்காலத்தில் கிடைக்கும் கல்வெட்டுக்களுக்கும் மிகப் பழங்காலத்தவை. தமிழ் இலக்கிய வரலாறு எழுதப்படாத காலத்தில்—பழந்தமிழ் நூல்கள் இன்னின்னவை என்றுகூட அறியாது தமிழ்ப்புலவர்கள் வாழ்ந்த காலத்தில்—கால்டுவெல்

மொழியாராய்ச்சி செய்ய நேர்ந்தமையின் அவர் தமிழின் பழந் தொன்மைச் சிறப்பை உள்ளவாறு அறியமுடியாது போயிற்று. திராவிட மொழிகளுள் மிகவும் பழமையானது தமிழே என்று அவர் நிலைநாட்டுவதற்குச் சிறந்த சான்றுகளாகத் தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் அவர்க்குக் கிட்டாது போனமை ஒரு குறையே.

10. வடமொழிச் சொல்லான கர்மன் (தொழில்) என்பது தம் காலத்தில் கருமம், கன்மம் என்று மாற்றப்பட்டதாகவும், பழந்தமிழில் 'கம்' என்று திரிந்து வழங்கப்பட்டதாகவும் கூறுகிறார் (பக்கம் 85). அவ்வாறு திரித்து வழங்கும் பழந்தமிழ் நூல் எதுவென்று தெரியவில்லை. அவரும் அந்நூற் பெயரைச் சுட்டவில்லை. தமிழில் கன்மம் என்ற சொல் பிற் காலத்தே தத்துவக் கருத்துக்களை விளக்குவதற்காகக் கடன் வாங்கப்பட்ட சொல்லாகும்.

11. தமிழகத்தின் இக்கால மாவட்டங்கள் இரண்டிற்குப் பெயராய் விளங்கும் 'ஆற்காடு' என்ற சொல்லுக்கு 'ஆறு காடுகள்' என்ற பொருளைக் கொண்டுள்ளார் (பக்கம 93). இக் காலத்தில் சிலர் ஆர் என்பது ஆத்தி; ஆத்தி மரங்கள் செறிந்த காடாய் விளங்கியிருந்தமையின் 'ஆர்க்காடு' என்ற பெயராயிற்று என்றும், 'ஆற்காடு' என்றெழுதுவது பிழை என்றும் கூறுவர். கால்டுவெல் தொல்காப்பியம் படித்திருப்பின்,

"போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்"

என்ற க00சு ஆம் நூற்பாவில் ஆர் என்ற சொல் வழங்கப்பட்டிருப்பதையும் குறித்து ஆராய்ச்சி செய்திருப்பார்.

12. கிரேக்க வணிகர்கள் வருமுன்பே தமிழகத்தில் எழுத்துக்கள் வளர்ந்திருக்கும் என்றும், திராவிட மொழிகளின் இலக்கணமும் வரையறை செய்யப்பட்டும் இருக்கும் என்றும் கால்டுவெல் ஊகிக்கிறார் (பக்கம் 103). அவர் ஊகித்தது முற்றிலும் உண்மை என்பதைத் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் நமக்குக் காட்டுகின்றன. தொல்காப்பியம் அவர்க்குக் கிடைத்திருந்தால் தொல்காப்பிய நூற்பாக்களின் அழகு, இனிமை, கவிதை நலம் முதலியவைமட்டுமன்றி, அவற்றில் தமிழிலக்கண வரையறை எவ்வளவு திட்பமாகவும் நுட்பமாகவும் செய்யப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து அவற்றின் ஒட்பத்தை வியந்துவியந்து பாராட்டியிருப்பார்.

(தொடரும்)

# திருவாசகத்தின் இயற்பெயர் யாது?

[புலவர் சுந்தர சண்முகனுர், புதுவை]

திருவாசகம் என்பது ஒரு சைவ சமய நூல்; தமிழில் மலர் தூவி அருச்சனை செய்து இறைவனை வழிபடுவதற்கேற்ற ஒரு சிறந்த நூல். இதன் ஆசிரியர் மாணிக்கவாசகர் ஆவார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் என்னும் நான்கு சைவப் பெரியார்களையும் 'நால்வர்' என்னும் சொல்லால் விதந்து கூறுவது சைவ மரபு. இந் நால்வருள் ஒருவராய் மாணிக்கவாசகரது அருட்படைப்பே திருவாசகம். தலைசிறந்த சைவப் பெருநூற்கள் சில பன்னிரண்டு திருமுறைகளாக வகுத்துத் தொகுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் நமது திருவாசகம், எட்டாந்திருமுறையாக அமைந்து போற்றப்பட்டு வருகிறது.

இந்தத் திருவாசகம் என்னும் நூலுக்கு, இதனை எழுதிய மாணிக்கவாசகர் இட்ட இயற்பெயர் என்ன? என்பதுதான் இங்கே எடுத்துக்கொண்ட ஆராய்ச்சியாகும். இயற்பெயர் என்பது, முதலில் அதன் ஆசிரியரால் இடப்பட்ட பெயராகும். சில நூற்களுக்கும் ஆசிரியர் வைத்த பெயர் இருக்கப், பின்னுல் சில சிறப்புப் பெயர்கள் தோன்றுவதும் உண்டு. சிறப்புப் பெயர் பெற்ற ஒரு நூல், நாளடைவில் தன் இயற்பெயரை இழந்து விடுவதும் உண்டு. மாணிக்கவாசகர் எழுதிய நூலும் இந் நிலைக்கு உள்ளானதேயாம். அஃதாவது, திருவாசகம் என்னும் பெயர் இந் நூலின் இயற்பெயரன்று; பின்னுல் ஏற்பட்ட சிறப்புப் பெயரேயாம்.

அங்ஙனம் எனில், திருவாசகத்தின் இயற்பெயர் யாது? அதனை ஆய்ந்து துணிந்துள்ளேன்; அம்முறை வருமாறு:

பல தலைப்புகளின்கீழ், சிவன்மேல் பாடப்பட்ட தோத்திரப் பாடல்களின் தொகுப்பு நூலாகவே திருவாசகம் காட்சியளிக்கிறது. அந்நூலுள், சிவபுராணம், முதல் அச்சோப் பதிகம் ஈறுக ஐம்பத்தொரு பகுதிகள் (தலைப்புகள்) உள்ளன. பெரும்பாலான பகுதிகளில், ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் வரக்கூடிய சொல்லோ அல்லது தொடரோ அப்பகுதியின் தலைப்புப் பெயராக அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாக, 'எம்பாவாய்' என்று பாடல்தோறும் முடியும் பகுதிக்குத் 'திருவெம்பாவை' என்ற பெயர் அமைந்தமை காண்க. இவற்றுள் ஒவ்வொரு பகுதியும் பல ஊர்களில் பல காலங்களில் பாடப்பட்டதாக எழுதப்பட்டிருக்கிறது.

திருவாசகத்திலுள்ள ஐம்பத்தொரு பகுதிகளுள் முதற் பகுதியாக அமைந்திருப்பது 'சிவபுராணம்' என்னும் தலைப் பாகும். இந்தப் பகுதிக்கு ஏன் இந்தப் பெயர் கொடுக்கப் பட்டது? 'போற்றி, போற்றி' என்று அடிக்கடி வந்துள்ள பகுதிக் குப் 'போற்றித் திருவகவல்' என்ற பெயரும் 'எம்பாவாய், எம்பாவாய்' என்று அடிக்கடி வந்துள்ள பகுதிக்குத் 'திருவெம் பாவை' என்ற பெயரும், இதுபோலவே அமைந்திருக்கும் மற்றப் பகுதிகளுக்கும் மற்ற பெயர்களும் கொடுக்கப்பட்டிருப்பது ஒரு வகையில் முறையே. ஆனல் முதல் பகுதிக்குச் 'சிவபுராணம்' என்னும் பெயர் கொடுக்கப்பட்டது ஏன்? இந்தப் பகுதியில்,

"சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பன் யான்"

என்னும் அடிகள் காணப்படுவதனலேயே, இதற்குச் சிவபுராணம் என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். இப் பெயர் சூட்டுவேலை ஆசிரியருடையதன்று; பிற்காலத்தவரின் செயலே யாம்.

இந்தப் பகுதிக்கு ஆசிரியர் எந்தப் பெயரும் சூட்டவில்லை. இது 'பாயிரம்' எனப்படும் பகுதியாகும். அஃதாவது, நூலுக்கு முன்னல் எழுதப்படும் ஆசிரியரின் முன்னுரையாகும் என்பதே என் கருத்து. இதற்குப் பல சான்றுகள் பகர்வேன்:

அன்றுதொட்டு இன்றுவரை, இறைவன்மேல் செய்யுள்நூல் எழுதுபவர்கள், முதலில் கடவுள் வணக்கம் எழுதி, அடுத்துத், தாம் எழுதப்போகும் நூல் இன்னது அதனை எழுது வதற்குத் தமக்கு எந்தத் தகுதியும் இல்லையாயினும் ஆவல் பற்றி எழுதுவதாக அவையடக்கம்—அந்நூலைப் படிப்பதால் உண்டாகும் பயன்-முதலியவற்றை எழுதிவிட்டே, பின்னர் முறையாக நூலின் உட்பொருளில் புகுவர். இதற்குப் பாயிரம் அல்லது முன்னுரை என்பது பெயர் திருவாசகத்தின் முதற் பகுதியும் இன்னதே. இப்பகுதியில் சில அடிகள் வருமாறு:—

"சிவன்அவன் என்சிந்தையுள் நின்ற வதனல்
அவன்அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பன் யான்
.................... .............. .....பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
.......................................
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து."

மேல் உள்ள அடிகளைக் கூர்ந்து நோக்குபவர்க்கு, இஃது ஒரு தனிப்பகுதியன்று; ஆசிரியரின் முன்னுரையேயாம் என்பது தெளிவாகப் புரியும்.

எனவே, மேற்கூறிய அடிகளிலிருந்து, ஆசிரியர் தம் முழு நூலுக்கும் சிவபுராணம் எனப் பெயரிட்டுள்ளார் என்பதும், தம் சிந்தை மகிழவும் பழவினை மாயவும் சிவபுராணம் உரைக்கிறார் என்பதும், இறைவனது பெருஞ்சிறப்பைப் புகழும் ஆற்றல் இல்லாதவரென அவையடக்கம் கூறியுள்ளார் என்பதும், இந் நூலைப் படிப்பவர்கள், சிவனது உலகமாகிய வீட்டுலகில் பலரும் ஏத்தும்படி வீற்றிருப்பர் என்று நூற்பயன் கூறியுள்ளார் என்பதும் பிறவும் புலப்படும்.

இம்முறையினைப் பிற்காலத்தவர் மட்டுமன்றி, மாணிக்க வாசகரின் காலத்துக்கு முன்னும் பின்னும் ஒட்டிய காலத்துப் பேரறிஞர்களும் கையாண்டுள்ளமை நம் ஆராய்ச்சிக்குப் பெரிதும் அரண் செய்யும். அஃதாவது, திருமூலர், கம்பர், சேக்கிழார் முதலிய பெரியோர்களும் இம்முறையைக் கையாண்டுள்ளனரே! அவர்களின் முன்னுரைகளையும் பார்ப்போமே!

முதலில் திருமூலரை எடுத்துக்கொள்வோம். இவர் மாபெருந் தமிழறிஞர். இருபதாம் நூற்றாண்டின் எந்தப் புரட்சியாளரும் இவரிடம் உரைபோடக்கூடக் காணமாட்டார்கள். இவர்,

"ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
.......................................
வேரறியாமை விளம்புகின்றேனே"

என்று அவையடக்கம் கூறுகிறார். அஃதாவது, இறைவன் பெருமையை யாராலும் அறிய முடியாது, சொல்ல முடியாது என்று கூறியுள்ளார். இதுபோலவே, மணிவாசகரும், "பெருஞ்சீர் பொல்லாவினையேன் புகழுமாறு ஒன்றறியேன்" என்று கூறியுள்ளார்.

மேலும் திருமூலர் தாம் செய்த நூலுக்கு, "மூவாயிரம் தமிழ்" எனப் பெயரிட்டுள்ளார். இதனை அவரே கூறியுள்ள "மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்" என்ற பாடலால் உணரலாம். இந்த நூலில், மூவாயிரம் பாடல்கள் உள்ளதால் 'மூவாயிரம் தமிழ்' என்ற பெயரை ஆசிரியர் இட்டார். ஆனால் இந்த இயற்பெயர் நாளடைவில் மறைந்து, 'திருமந்திரம்' என்ற சிறப்புப் பெயரே இக்காலத்து வழங்கப்படுகின்றது. இப்போது, திருமந்திரம் என்றால்தான் யாருக்கும் தெரியும்; மூவாயிரம்

தமிழ் என்றால் ஒருவருக்கும் தெரியாது. இதுபோலவே, மாணிக்கவாசகர் இட்ட சிவபுராணம் என்னும் பெயர் மறைக்கப் பட்டு, திருவாசகம் என்னும் பெயரே வழக்காற்றில் உள்ளது.

கம்பர் தமது நூலுக்கு 'இராமாவதாரம்' என்றே பெயர் வைத்தார். இதனை அவர் பாடியுள்ள "இராமாவதாரப் பேர்த் தொடை நிரம்பிய தோம்அறு மாக்கதை" என்ற பாடற்பகுதி யால் உணரலாம். இவரைப்போலவே சேக்கிழாரும் தமது நூலுக்குத் 'திருத்தொண்டர் புராணம்' என்றே பெயர் வைத் தார். இதனை அவர் பாடிய "இங்கிதன் நாமம் கூறின்........திருத் தொண்டர் புராணம் என்பாம்" என்னும் பாடற் பகுதியால் அறியலாம்.

எனவே, கம்பரிட்ட 'இராமாவதாரம்' என்னும் பெயர் மறைய, இராமாயணம் என்ற பெயரே பின்னர் நிலைத்துவிட் டதைப்போல, சேக்கிழார் இட்ட 'திருத்தொண்டர் புராணம்' என்னும் பெயர் மறைய, 'பெரிய புராணம்' என்னும் பெயரே பின்னர் நிலைத்துவிட்டதைப்போல, மாணிக்கவாசகர் இட்ட 'சிவபுராணம்' என்னும் பெயர் மறைந்துபோக, பின்னர்த் திரு வாசகம் என்னும் பெயரே ஆணிவேர் விட்டுப் பதிந்து நிலைத்து விட்டது.

மேலும் திருமூலர்,

> "காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்
> ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே"

என்று நூற்பயனும் கூறியுள்ளார். அதாவது, மூவாயிரம் தமிழ் என்னும் திருமந்திர நூலைக் காலையில் எழுந்து பொருளுணர்ந்து கற்பவர்கள் உலகத் தலைவனாகிய இறைவனை அடைவர் என்று கூறியுள்ளார். இதுபோலவே மாணிக்கவாசகரும்,

> "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
> செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
> பல்லோரும் ஏத்தப் பணிந்து"

என்று நூற்பயன் கூறியுள்ளார். இப்படியிருக்கும்போது, திரு வாசகத்தின் முற்பகுதியை முன்னுரை என்று சொல்லாமல், ஒரு தனிப்பகுதி என்று எவ்வாறு சொல்லமுடியும்? சிவபுராணம் என்பது முழு நூலுக்கும் பெயராகும் என்று சொல்லாமல், முன்னால் உள்ள ஒரு தனிப்பகுதியின் பெயர் என்று எப்படிச் சொல்லலாம்?

இன்னும் வளர்த்துவானேன்? திருமந்திரம் எழுதிய திரு மூலரைப் போலவே, இராமாயணம் எழுதிய கம்பரும் பெரிய

புராணம் இயற்றிய சேக்கிழாரும் பிறரும், நூலின் முற்பகுதியில் அவையடக்கமும், நூலின் பெயரும், நூலைப் படிப்பதனுலாம் பயனும் கூறிப்போந்துள்ளனர். அவற்றை அவர்தம் நூற்களில் கண்டு கொள்ளலாம். இருப்பினும் இங்கே ஒன்றுமட்டும் குறிப்பிடத் தக்கது:

கம்பராமாயணத்திற்குக் கம்பர் இட்ட பெயர் 'இராமாவதாரம்' என்பதும், பெரிய புராணத்திற்குச் சேக்கிழார் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பதும் அறியப்பட்டாவது இருந்தன; ஆனல், திருவாசகத்திற்கு மாணிக்கவாசகர் இட்ட பெயர் சிவபுராணம் என்பது இதுநாள் வரை எவரானும் அறியப்படா திருந்ததுதான் இரங்கத்தக்க நிகழ்ச்சியாகும்.

எனது ஆராய்ச்சி குறித்துக் கருத்து வேறுபாடு கொள்பவர் என்னென்ன தடைகள் கூறக்கூடும் என்பதையும் அவற்றுக்கு விடையினையும் ஈண்டுத் தர விழைகிறேன்.

தடை :—புராணம் என்பது, பழம்பெருமைகளை—பழைய வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறும் நூலாயிற்றே! திருவாசகத்தில் அப்படி என்ன உள்ளது? மிகச் சிறிய ஒரு நூல் புராணம் ஆகுமா? புராணத்தின் தகுதிகள் அதற்குண்டா?

விடை :—ஐம்பது பகுதிகள் கொண்ட திருவாசகம் என்னும் முழுநூலும் புராணம் ஆக முடியாதபோது, முற்பகுதியில் முன்னுரைபோல் உள்ள ஒரு பகுதி மட்டும் 'சிவபுராணம்' என்னும் பெயருக்கு ஏற்றதாக முடியுமா?

தடை :—திருவாசகத்தின் முதற்பகுதி முன்னுரையாயின், நூல் முழுதும் திட்டமிட்டு ஒருசேர எழுதப்பட்டிருக்க வேண்டுமே. அப்படி எழுதியதாகத் தெரியவில்லையே. திருவாசகத்தின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு நேரத்தில் வெவ்வேறு ஊரில் எழுதப்பட்டதாகத் தெரிகிறதே!

விடை :—மணிவாசகர் தாம் பயணம் செய்த ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு பதிகம் எழுதியதாக ஒவ்வொரு பகுதியின் முன்பும் ஊர்ப் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதை அப்படியே ஏற்றுக் கொள்வதற்கில்லை. அவ்வூர்ப் பெயர்கள் மணிவாசகரால் குறிப்பிடப்பட்டவை யல்ல. அவ்வேலை பிற்காலத்தவரின் கைவண்ணமேயாம். இந்த இந்தப்பகுதி இந்தஇந்த ஊரில் பாடப்பட்டது என்பதிலும் அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை உள்ளது. காட்டாகத் திருவெம்பாவையை எடுத்துக் கொள்வோம். இஃது அருளிச் செய்யப்பட்ட இடம் திருவண்ணுமலை என்று கடவுள் மாமுனிவர் தம் திருவாதவூரர் புராணத்

திலும், திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தம் திருப்பெருந் துறைப் புராணத்திலும் கூறியுள்ளனர். ஆனால் கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகரோ தில்லையில் அருளிச் செய்யப்பட்ட தாகக் கூறியுள்ளார். பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவரோ, திருவெம்பாவை திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்ட தாகத் தம் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் தெரிவித்துள்ளார். அப்படியே மணிவாசகர் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு ஊரில் எழுதியதாக இருப்பினும், இறுதியில் ஒருமுறை எல்லாப் பகுதிகளையும் தாமே தொகுத்தார் என வரலாறு கூறுகிறது. அதாவது, தில்லையில் இறைவனே மனித உருவில் வந்து, திருவாசகம் முழுவதையும் மணிவாசகரைச் சொல்லச் செய்து, தம் கையாலேயே எழுதியதாகச் சொல்லப்படுகிறது. (இறைவன் எழுதிய இந்த ஓலைச்சுவடி தங்கள் மடத்தில் இப்பொழுதும் இருப்பதாக, புதுச்சேரி அம்பலத்தாடையர் மடத்தினர் சொல்லிக் கொண்டிருக்கின்றனர்.) இறைவன் எழுதினாரோ அல்லது ஒரு சிறந்த சிவனடியார்தாம் எழுதினாரோ!. எப்படியோ ஒருமுறை மாணிக்கவாசகரின் நேர்ப் பார்வையில் ஒரே நேரத்தில் ஒருசேர திருவாசகம் முழுமைப் படுத்தப்பட்டிருக்கிறது என்ற முடிவுக்குத் துணிந்து வரலாம்.

எனவே, ஒரே நேரத்தில் நூலைத் தொகுத்து முழுமைப் படுத்திக் கண்ட மணிவாசகர், பாயிரம் எனப்படும் முன்னுரையை நூலுக்கு முன் அமைத்திருப்பதில் புதுமையோ—வியப்போ இல்லையே. மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து, ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் பாடல்கள் எழுதியதாகக் கதை பேசப்படும் திருமூலரின் திருமந்திரத்திற்கே பாயிரம் உள்ளதே! அங்ஙன மிருக்கத், திருவாசகத்திற்கும் ஏன் பாயிரம் இருந்திருக்க முடியாது?

இன்னும் கேட்டால், சிவபுராணம் என்னும் முதல் தலைப்புக்கு, சில ஓலைச் சுவடிகளுள் விளக்கமே இல்லை. இதற்குள்ள பொருள் என்ன? சிவபுராணம் என்பது, மற்ற உள் தலைப்புகளைப் போன்றதன்று; நூல் முழுமைக்கும் உரிய பொதுப் பெயராகும்—என்பதே இதற்குப் பொருள் அன்றோ?

மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரண்டின் பழைய ஓலைச் சுவடிகள் எங்கள் வீட்டில் உள்ளன. அவை எங்கள் பாட்டன் பூட்டன் காலத்தவை. (கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் ஒருவர் ஒருமுறை எங்கள் இல்லம் போந்து இவ்வோலைச் சுவடிகளை ஒப்புநோக்கி ஆராய்ந்து

சென்றுள்ளார்.) இந்தப் பழைய திருவாசக ஓலைச்சுவடியில், சிவபுராணம் என்னும் தலைப்பின்கீழ் ஒரு விளக்கமும் இல்லை. மற்றத் தலைப்புகளுக்கு மட்டுமே விளக்கம் காணக்கிடக்கிறது.

> "தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
> அல்லலறுத் தானந்த மாகியதே—எல்லை
> மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
> திருவா சகம்என்னுந் தேன்"

என்னும் செய்யுள் பல சுவடிகளிலும் காணக்கிடக்கின்றது. இச் செய்யுளில் திருவாசகம் என்றுதானே குறிக்கப்பட்டுள்ளது?

இச் செய்யுள் மாணிக்கவாசகர் எழுதியதன்று என்பதை 'வாதவூர் எங்கோன்' எனப் படர்க்கையில் கூறியிருப்பதிலிருந்தே உணரலாம். பிற்காலத்தவர் ஒருவர், நூலின் பெருமை கூறுமுகத்தான் இப்பாடலைப் புனைந்து சேர்த்துள்ளார். அல்லது, தலைப்புகளுக்கு விளக்கம் எழுதியவரின் பாட்டாகவும் இஃது இருக்கலாம். எங்கள் ஓலைச் சுவடியிலோ, நூற்சிறப்பாக, இச் செய்யுளோடு இன்னும் இரண்டு செய்யுட்கள் காணப்படுகின்றன. இவை யெல்லாம் பிற்சேர்க்கைகளே.

எனவே, மாணிக்கவாசகரால் அருளிச் செய்யப்பட்டுத், திருவாசகம் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் நூலுக்கு. ஆசிரியரால் இடப்பட்ட இயற்பெயர் 'சிவபுராணம்' என்பதாகும்—என்பது இனிது விளங்கும் திருவாசகத்தின் பகுதிகள் பற்பல ஊர்களிற் பாடப்பட்டது உண்மையேயாயினும் அவற்றையெல்லாம் தில்லையிலிருந்து தொகுத்தார் என்பது மறுக்க முடியாத வரலாற்றுண்மையாம். அவ்வாறு தொகுத்த போது இந்நூலுக்குச் சிவபுராணம் என்ற பெயர் இட்டிருப்பார் எனக் கொள்வதில் ஐயம் எவர்க்கும் எழுவதற்கு இடமின்று. அப்பாடலினுட் பொருளும் அதற்குச் சான்றாம் என்பது ஒருதலை. 'வாதவூரர் என்னும் இயற்பெயர் மாற, மாணிக்க வாசகர் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் ஆசிரியர் இயற்றிய சிவபுராணமும் திருவாசகம் என்னும் சிறப்புப் பெயர் பெற்றதில் வியப்பொன்றும் இல்லையே! மேலும் ஒருவர் தாம் எழுதிய வாசகத்திற்குத் தாமே திருவாசகம் என்னும் சிறப்புப் பெயர் சூட்டியிருக்க முடியாதன்றோ?

# அருட்புகழ்

## [அருட்கவி சேதுராமன் அவர்கள் பாடியது]

மயிலாப்பூர்த் திருக்கோவில் அறங்காக்கும் முதன்மையரும் கொண்டு நடத்தும் ஆணையரும் பிறரும் அருட்கவியாரவர்களைத் திருக்கோவில் மதிப்புகளுடன் இயம் இயம்பச் சிறப்பாக வரவேற்றனர். திருவருட் காட்சியினைக் கண்டு களித்துப் பயன்பெறும் பொருட்டுச் செந்நெறியன்பர்கள் இருபாலரினும் ஏராளமாகக் குழுமியிருந்தனர். அவ்வனைவர் தம் உள்ளமும் முகமும் பத்திவெள்ளத்தால் பொலிந்து தோன்றின.

கல்வி நிதியமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்கள் தொடங்கி வைத்துச் சில மணிநேரம் உடனிருந்து உற்றுணர்ந்து பயன் எய்தினர். பின் இன்றியமையாது வேறோரிடம் செல்லநேர்ந்தமையால் விடைபெற்றுச் சென்றனர். வந்திருந்த அன்பர் பலருள்ளும் முதன்மைச் சிலர் தம் திருப்பெயர் வருமாறு: திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியாரவர்கள் (அறநிலைய ஆட்சித் துறை ஆணையர்) திரு டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் (அறநிலைய ஆட்சித்துறை உதவியாணையர்) திரு. இராமலிங்க ரெட்டியார் (துணையாணையர்) திரு எஸ். கணேசம் பிள்ளை (செயலர், ஆட்சிமொழித்துறை) திரு. ஜி. வேங்கடாசலபதி நாயுடு (ஆணை இயக்குநர், நாட்டு வளர்ச்சித்துறை) திரு. சா. கணேசன் அவர்கள் எம். எல். ஏ திரு. அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள் எம். ஏ. (அறிஞர் மொழிபெயர்ப்பாளர்) திரு மீ. ப. சோமசுந்தரம் (அனைத்திந்திய வானொலி நிலையம்) திரு. ம. ரா. சம்பந்தம் அவர்கள், (செயலர் சிவனடியார் திருக்கூட்டம், சென்னை) திரு. திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள், பெருமழைப்புலவர் சோமசுந்தரனார், கழகப்புலவர் இராமநாதபிள்ளை, திரு கு அய்யா சுப்பிரமணி முதலியார் அவர்கள், திரு. பம்மல், வரதராச முதலியாரவர்கள், திரு. அண்ணாமலை முதலியாரவர்கள், திரு ஜி எம். முத்துசாமிப் பிள்ளை அவர்கள் (ஓய்வுபெற்ற மாவட்டத் தண்டல் நாயகம்) திரு. ஆவுடை நாயகம் பிள்ளையவர்கள் (மாநிலக் குற்ற மன்ற நடுவர்.)

### திருமயிலாப்பூர்—கூத்தாடும் விநாயகர் திருமுன்

…வேரி] [மிச்ர …புடை

### திருவடித் தாமரை பெற

தனதன தாத்தான தானனத் தனதான

பலபல பாட்டாலிசை பாடியற் புதமாகப்—
பழவினை நீர்த்தேனிலை நீகடைக் கணியாதே;
விலகிடில் மற்பாரெவர் நாயெனைக் கருதாயோ—
விழுமிய தாட்டாமரை தானளித் தருள்வாயே;
நலமென நாட்டார்புகழ் வாரணத் துருவோனே—
நளிர்புனல் காற்றோடனல் பூவெளிப் படிவோனே;
குலமயி லாபபூர்திகழ் கோபுரக் குணவாயிற்—
குலவிடு கூததாடுவி நாயகப் பெருமானே. (1)

குறிப்புரை : கடைக்கணியாதே - கடைக்கண் பார்வை காட்டாமல். நாயெனை - நாயேனை அல்லது நாயாகிய என்னை. விழுமிய - சிறந்த. தாள் தாமரை - செந்தாமரைத் திருவடி. நாட்டார் - நாட்டவர்; உலகோர். வாரணத்து உரு - யானையின் வடிவு. தளிர்புனல் - குளிர்ந்த நீர். பூ - பூமி. வெளி - ஆகாயம். படிவு - வடிவு. தளிர்......வெளி - பஞ்சபூதங்கள். இறைவன் ஐம்பூத வடிவினன் :

"பூதம் அவை ஐந்தாய்......ஆனான்"

—சம்பந்தர் ("ஈன்றாய்முதல்").

குலமயிலாப்பூர் - சிறந்த மயிலையம்பதி. குலம் - கோயில் எனினுமாம். கோபுரக்குணவாயில் - கீழைக் கோபுரவாயில். குணக்கு - கிழக்கு. கூத்தாடும் விநாயகர் - மயிலாப்பூர்க் கீழைக்கோபுர வாயிலில் கூத்தாடிய வண்ணம் வீற்றிருப்பவர் ; இவரே ஸ்தல விநாயகருமாம்.

## கபாலீச்சுரர் திருமுன்

பண்-தக்கேசி]
ராகம்-காம்போதி] [தாளம்-ஆதி

('குரும்பைமுலை மலர்க்குழலி' என்ற சுந்தரர் தேவாரப்பண்)

எண்சீரடி ஆசிரிய விருத்தப் பதிகம்*

ஞாயிறுதீ மதிமூன்றும் நயனமெனை நயந்தீர்!
நவநிதிக்குங் கிழவனையே நண்பனென வியந்தீர்!
ஆயிரங்கண் ணிந்திரனை அடிமையென உகந்தீர்!
ஆரணற்கும் நாரணற்கும் அளக்கவெல்லை இகந்தீர்!
காயிருங்கா மலர்ப்புன்னைக் கானமிற்புக் கிருந்தீர்!
கற்பகமே அருகிருக்கக் கடைப்பலிக்கேன் திரிந்தீர்!
மாயிருங்கார்க் கடற்கரைவாய் சென்னைமயி லாப்பூர்
மருவுகபா லீச்சரத்தீர்! மாற்றமுரை யீரே! (2)

---

* இப் பதிகத்தில் முதல் ஒன்பது பாடல்களும் சூரியன் முதலான ஒன்பது கோள்களின் பெயர்களை முதலாகக் கொண்டு அமைந்துள. ஒன்பது கோள்களும் ஒளிமண்டலங்கள் ; இவற்றோடு, ஒளியோடு தொடர்பு கொண்ட, தீ, நட்சத்திரம், மின்னல் இம் மூன்றன் பேராலும் பின்னைய மூன்று பாடல்களும் தொடங்கப் பெற்றுள. இறைவனால் ஆக்கப்பட்ட இயற்கை ஒளிகள் ஐந்தென்பர் ; அவை சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மும்மண்டலங்களும், அவற்றுடன் நட்சத்திரமும், மின்னலுமாம். இப் பதிகத்தின் 8 ஆம் பாடல் கோளறு பாடலாயமைந் துள்ளமையாலும், ஒன்பது கோள்களின் பெயர்களால் பாக்கள் தொடங்குவதாலும் இப் பதிகமும் கோள்களால் ஏற்படும் துன்பத்தை நீக்கும் 'கோளறு பதிக'மாம் என்பதும், ஒளிமண்டலங்களின் பெயர்களால் துவக்குவதால், ஓதுவோர்க்கு எல்லா ஒளிகளையும் தரும் 'ஒளிப் பதிகமாம்' என்பதும் பெறப்படும். மேலும் இப் பதிகத்தில் சிவபிரான் சிறந்த செல்வன், தனவான் என்பதைப் பலபல ஏதுக்களால் எடுத்துக் காட்டி, அப்படியிருந்தும் ஏன் கபாலமேந்திப் பலியேற்க வேண்டும்

குறிப்புரை: ஞாயிறு - சூரியன். மதி - சந்திரன். நயனம் - கண். முச்சுடர்களும் சிவபிரானின் கண்கள்: "சுடர்மூன்றும் கண்மூன்ருக் கொண்டான் தான்காண்"—அப்பர் - 237-3. நவநிதிக்கும் கிழவன் - பதுமம், மாபதுமம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், நந்தம், நீலம், கர்வம் என்னும் ஒன்பது வகையான நிதிகட்கும் உரியவனுன குபேரன். நண்பன் - குபேரன் சிவபிரானின் நண்பன்: "குபேரனொடு தோழமைக் கொள்பகவன்"—சம்பந்தர் - 219-5. ஆயிரங்கண் இந்திரன் - தேவேந்திரன், சாபம் நீங்கி ஆயிரங்கண் பெற்ருன் கண்ணூர்கோயில் என்ற திருத் தலத்தில்; அவன் அடிமையாகிச் சிவனை வழிபட்டமைக்கு ஆங்குள்ள இந்திர தீர்த்தமும் ஊர்ப்பெயருமே அறிகுறிகள்.

"முன்னொரு காலத் திந்திர னுற்ற முனிசாபம்
பின்னொரு நாளவ் விண்ணவ ரேத்தப் பெயர்வெய்தித்
தன்னரு ளாற்கண் ணாயிர மீந்தோன் சார்பென்பர்
கன்னியர் நாளுந் துன்னமர் கண்ணூர் கோயிலே"—சம்பந்தர்.

ஆரணன் - பிரமன். நாரணன் - திருமால். இகந்தீர் - கடந்தீர். ஆரணற்கும்......இகந்தீர் - இது திருவண்ணுமலையில் அயனரிகள் சிவபிரானது அடிமுடி தேடி அறியொணுதுபோன வரலாற்றைக் குறிக்கும். காய் இருங்கா - பிரகாசிக்கின்ற கறுத்த சோலை அல்லது காய்கள் காய்த்துள்ள பெரிய சோலை. புன்னைக்கானமில் - புன்னைக் காட்டில். கானமில் - கானத்தில். அத்து சாரியை தொக்கு நின்றது. மயிலாப்பூரும் புன்னைவனமும்: "மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலை"—சம்பந்தர். புக்கு - புகுந்து. கற்பகம் - கற்பகாம்பிகை; திருமயிலாப்பூர்த் தேவியார் திருப்பெயர். அம்மையின் பெயர் தொனிப் பொருளாகக் கற்பகத்தருவை நினைவூட்டியது. கற்பகத்தைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு, வேண்டியதெல்லாம் பெறமாட்டாமல், வீடுதோறும் ஏன் பலியேற்றுத் திரிகின்றீர் என்று கேட்ட நயம் உணரற்பாலது. கடை - வீட்டின் புறவாயில். மா - பெரிய. இருங்கார்க் கடல் - பெரிய, கரிய கடல் அல்லது மிகக் கறுத்த கடல். இருமை-கருமை-பெருமை-இவை ஒரு பொருட் பன்மொழி. கடற்கரை வாய் - கடலோரம் வாய்த்துள்ளதான. சென்னை மயிலாப்பூர்-சென்னையைச் சேர்ந்த மயிலையம்பதி; (Madras-4). கபாலீச்சரத்தீர்—திருமயிலாப்பூரிற் கோயிலின் பெயர் 'கபாலீச்சரம்' என்பது:

"மயிலைக்......கபாலீச்சரம் அமர்ந்தான்"—சம்பந்தர் ("மட்டிட்ட"). மாற்றம் - சொல்; மறுமாற்றம்; பதில்.

இப்பாடலில், நயந்தீர், வியந்தீர், உகந்தீர், இகந்தீர், இருந்தீர், திரிந்தீர் எனவரும் கடைஎதுகை நயமும் உய்த்துணரற் பாலதொன்று.

---

என்று கேட்டு விடை எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ஆதலால் இதனை யொரு 'வினவுரைப் பதிகம்' என்னலாம். இவ்வாறு, சம்பந்தர், சுந்தரர் போன்ற பெரியோர்களும் பாடியுள்ளமை ஈண்டு நினைவு கூர்தற்பாலது.

திருமயிலைச் சிவபிரான் திருப்பெயர் 'கபாலீசர்' ஆனதால், அவரது பிச்சாடன கோலத்தை நினைவுபடுத்தி, அங்ஙனம் பலிக்கெழுந்தது என்னே என இப்பாடல்களில் வினவப்பட்டது போலும்.

இப் பதிகம், 'பத்தூர்புக் கிரந்துண்டு' எனத் தொடங்கும் சுந்தரர் தேவாரப் பதிகக் கருத்துக்கள் பல விரவிவந்துள்ள பதிகமாயிருத்தலுங் காண்க.

(கருத்துரை.) கபாலீசரே! தங்களுக்குச் சூரியன், சந்திரன், அக்கினி மூன்றுமே கண்களாயிருந்தும், குபேரனே தோழனுயிருந்தும், இந்திரனே அடிமையாயிருந்தும், தாங்கள் பிரமவிஷ்ணுக்களாலேயே அறியமுடியாதவராயிருந்தும், பொன்போற் பூச்சொரியும் புன்னை வனத்தே புசிருந்தும், கற்பகமே அருகிலிருந்தும், [இவ்வளவு பெருமை படைத்தவரான நீர் சிறுமையாகப்] பலியேற்பதேன் என்றவாறு.

திங்களையுங் கங்கையையுஞ் சேகரித்தும் மேலும்
தீக்கரத்தின் வெம்மைசற்றுந் திரவில்லைபோலும்!
வெங்களத்தின் மேயவிட வெம்மையதா லுலும்
வேனில்வேள் படவிழித்த விழியின்வெம்மை யேலும்
இங்களவில் குளிரறையா என்னுளந்தா னிருக்க
எங்கெங்கோ பித்தனென ஏற்பதற்கேன் உழன்றீர்!
மங்களமா மயில்வடிவில் உமைதொழுத சென்னை
மயிலாப்பூர்க் காபாலீ! வார்த்தையுரை யீரே! (3)

குறிப்புரை: திங்கள் - சந்திரன்; குளிர்ந்த பண்டம். கங்கை - (குளிர்ந்த) கங்கைநீர். சேகரித்தும் - சடைமேற் சேர்த்து வைத்தும். தீக்கரத்தின் வெம்மை - கையில் ஏந்தியுள்ள தீயின் சூடு. சிவபிரான் கையில் தீ: "கனலெரி அனல்புல்கு கையவனே"—சம்பந்தர்-262-3. களத்தில் மேய - கழுத்திற் பொருந்திய. வெவ்விட வெம்மை - கொடிய ஆலகால விடத்தின் சூடு. வேனில்வேள் - மன்மதன். பட - அழிய. விழி - நெற்றிக்கண். வெம்மையேலும் - வெம்மையானாலும். களத்தின் மேய விட வெம்மை, வேனில் வேள்பட விழித்த விழியின் வெம்மை இவற்றையும் சற்றுந் தீரவில்லைபோலும் என்பதனோடு கூட்டுக. இங்கு அளவில் குளிர் அறையா - ஈண்டு, அளவில்லாத (அல்லது சூட்டைத் தணிக்கவேண்டிய அளவில்) குளிர்ச்சி பொருந்திய உள்ளாக. குளிரறை- (Air Conditioned Room.) பித்தனென-பித்துப் பிடித்தவர்போல. ஏற்பதற்கு - பலிபெறுவதற்கு. உழன்றீர் - திரிந்தீர். மங்களமா - மங்களகரமாக. (அல்லது) மங்கள - மங்கலகரமான. மா - சிறந்த எனினுமாம். மயில் வடிவில் உமைதொழுத மயிலாப்பூர் - மயில் உருவத்தில் உமா தேவியார் வழிபாடு செய்த மயிலை. சிவபிரானைப் புன்னைமரத்தடியில் பார்வதிதேவி மயில் வடிவங்கொண்டு பூசை செய்தனர் என்பது மயிலாப்பூர்த் தலவரலாறு: "மயிலாய் உமை பூசித்த சயிலேந்திரன் புதல்வி மாதா கற்பகாம்பிகை நாதா கடற்கரையில் மயிலாபுரிக் கிறைவா"— பாபநாசம் சிவன் கீர்த்தனை ("கடைக்கண் நோக்கி"). காபாலீ - கபாலீசரே! வார்த்தை - சொல்; பதில்மொழி.

இப்பாடலிலும், மேலும், போலும், ஆனாலும், வெம்மையேலும் எனவரும் பின்னெதுகை நயங் காண்டற்குரியது.

(கருத்துரை.) கபாலீசரே! குளிர்ச்சி பொருந்திய சந்திரனையும், கங்கை நதியையும் சடையின்மேற் சூடியுங்கூடக், கையிலேந்தியுள்ள தீச்சூடு தணியவில்லையோ! ஆலகால விடத்தின் சூடாயினும் சரி, மன்மதனைச் சுட்ட நெற்றிக்கண் தீயின் சூடாயினும் சரி, தணியவேண்டுமாயின், என்னுடைய உள்ளமாகிய குளிரறையிருக்கையிலே அங்குவந்து தங்காமல், சூட்டின் மிகுதியால் பித்துப்பிடித்தவர்போல் எங்கெங்கோ திரிகின்றீரே பிச்சையெடுப்பதற்கு, ஏன் என்றவாறு.

**செவ்வாய்க்கே உரியவனுஞ் சிங்கார வேலன்**
**தெள்ளிமுகன் காரியையன் வீரபத்ரன் என்னும்**
**அவ்வாறில் ஒன்றுகுறை ஆண்பிள்ளைகள் பெற்றும்**
**ஐயன்நீர் ஐயமுரு தையமதேன் புகுந்தீர்!**
**தெவ்வாய திரிபுரத்தார் வெண்பொன்மதில் கரும்பொன்**
**செம்பொன்மதில் மூன்றினையுந் தீத்தழித்த திறலீர்!**
**மவ்வாய்த்த முடிபுடைய மந்திரத்தீர்! சென்னை**
**மயிலாப்பிற் காபாலீ! மறுமொழிசொல் லீரே! (4)**

குறிப்புரை: செவ்வாய் - அங்காரகக் கிரகம். செவ்வாய்க்கு உரியான் - அங்காரகக் கோளுக்கு அதிதேவதை முருகக் கடவுள்: "இரவி சங்கரன் ஈச்வரி திங்கள்சேய், இனியகந்தன் இசைதிருமால்புதன், குருஅயன் சுரர் கோன்வெள்ளி சன்னெமன், குலஇராகு குறிபத்ர காளியாம், மருவுசித்திரா புத்திரன் கேதுவாம்"—நவக்கிரக அதிதேவதை வாழ்த்து—சோதிட சாத்திரம். (சேய் - செவ்வாய்); "செவ்வாய்க் குரியான்"—அருணகிரிநாத சுவாமிகள் தோத்திர மஞ்சரி - 50; திருச்செங்கோட்டுத் தோத்திர மஞ்சரி—பாடல் 15. சிங்காரவேலன் - திருமயிலை முருகவேள் திருப்பெயர்; பாடல் 29-இன் கடைசி அடியும் பார்க்க. தெள்ளிமுகன் - யானைமுகக் கடவுள்; விநாயகர். தெள்ளி - யானை. காரி - வைரவக் கடவுள். ஐயன் - ஐயனார். வீரபத்ரன் - வீரபத்திரக் கடவுள். ஆறில் ஒன்று குறை 6—1=5. விநாயகர், முருகவேள், பைரவர், வீரபத்ரர், ஐயனார் ஆகிய ஐவரும் சிவபிரானின் மைந்தர்கள் என்ப. ஐயமுறுது - சந்தேகமின்றி. ஐயம் - பிச்சை. தெவ் - பகைவர்கள். திரிபுரத்தார் - தாருகாட்சன், கமலாட்சன், வித்யுன் மாலி எனும் முப்புரத் தலைவர்கள் மூவர். வெண்பொன் - வெள்ளி. கரும்பொன் - இரும்பு. முப்புரத் தலைவர்களின் கோட்டைகள் மூன்றும் பொன், வெள்ளி, இரும்பு இந்த மூன்றுலானவை. "மயன் தான் மகிழ்ந்திரும்பு வெள்ளி பொன்னால் மனையவர்க்குச் சமைத்தான்"—ஞானவசிட்ட-உபதேச - 2036. தீத்து - எரித்து. மவ்வாய்த்த முடிபுடைய மந்திரத்தீர் - 'ம' என்னும் எழுத்தை முடிவாக உடைய 'சிவாயநம' என்னும் திருவைந்தெழுத்து மந்திரத்துக்கு உரியவரே! மறுமொழி - பதில்.

(கருத்துரை.) கபாலீசரே! முருகவேள், கணபதி, பைரவன், ஐயன், வீரபத்ரன் என்னும் ஐந்து ஆண்பிள்ளைகளைப் பெற்றிருந்தும், திரிபுராசுரர்களுடைய பொன், வெள்ளி, இரும்பாலான முப்புரங்களை எரிக்கவல்ல ஆற்றல் பொருந்தியிருந்தும் தாங்கள் ஏன் சிறிதும் ஐயுறாமல் பிச்சையேற்கப் புகுந்தீர் என்றபடி.

**புதனையொரு சுதனென்னும் பூரணமா மதியும்**
**பூடனும்நித் தியம்வலஞ்செய் பொன்மலைநுங் கைவில்**
**அதனையொர்செண் டாலடித்தே அளவில்பொனைப் பெற்றான்**
**அன்றொருநாள் நும்பிளையாம் உக்கிரப்பேர் வழுதி**
**இதனைவிட நீரிருக்கும் இடமும்வெள்ளி மலையா**
**இருக்கவுமூர் சிரிக்கவுமேன் இடுபலிக்கென் றலைந்தீர்!**
**மதனைவென்ற கழுமலத்தெம் அழகர்புகழ் சென்னை**
**மயிலாப்பூர்க் காபாலீ! மணிமொழியா டீரே! (5)**

**குறிப்புரை:** புதன் - புதன் என்னும் கோள். சுதன் - பிள்ளை. புதன், சந்திரனுக்குத் தாரையிடத்துப் பிறந்த மகன்; புதனுக்கு 'மதிமகன்' என்றே பெயர். பூடன் - சூரியர்கள் பன்னிருவருள் ஒருவன். நித்தியம் - தினமும். பொன்மலை வில் - மேருமலை வில்: "பொன்மலை வில்லை ஏற்றுடையான்"—அப்பர்-184-6. சந்திரனும், சூரியனும் மேருமலையைத் தினமும் வலஞ்செய்வர். "சுடரொடு சூழ்வரு தாரகை மேரு"—பரிபாடல்-19-19. "இரவியு மதியமும் உடன்வலம் வருமலை"—தக்கயாக-43. "வானம் தைவரு சுடரும் கோளும் நாள் களும் தழுவிச் சூழும் தெய்வதமலை"—திருவிளை-மேருவை-24. அதனை - அந்த மேருமலையை. ஓர் - ஓர் - ஒப்பற்ற. செண்டு - ஓராயுதம். அளவில் - அளவில்லாத. பொனை - பொன்னை. பிளை - பிள்ளை. உக்கிரப்பேர் வழுதி - உக்கிர குமார பாண்டியன்; இவன் முருகவேளின் கூறு; மதுரையை அரசாண்ட சிவபிரானும் சுந்தர பாண்டியனுக்கும் பார்வதி யாம் தடாதகைப் பிராட்டிக்கும் திருமகனாகத் தோன்றியவன்;

> "இந்திர சால விச்சை காட்டுவா னென்னத் தன்பாற்
> செந்தழல் நாட்ட மீன்ற செல்வனைக் கருப்ப மெய்தா
> தந்தமி லுயிரு ஞால மனைத்தையும் ஈன்ற தாயாம்
> சுந்தர வல்லி தன்பாற் றோன்றுமா றுள்ளஞ் செய்தான்"
>
> —திருவிளை. 11-6.

அதனை......வழுதி: மேருவைச் செண்டாலடித்து உக்கிரபாண்டியன் பொன் பெற்றமை: "பாகசா தனனை வென்றோன், நாணித்தன் சினமும் மேரு நகைவரைச் செருக்குமாறச், சேணுற்ற சிகரந்தன்னிற் செண்டினா லடித்து நின்றான்"; "பொன்னறை மருங்கிற் போகிப் பொத்திய பாறை நீக்கித் தன்னவா வளவிற்றூய தபனிய முகந்து மூடிப், பின்னதுந் தன்னதாகப் பெயரிலச் சினையுந் தீட்டா"—திருவிளை. 15-25; 33. இதனைவிட - இது தவிர. வெள்ளிமலை - கயிலாயம்; "வெள்ளி மால்வரை"—சம்பந்தர்-260-4. இடுபலி - இடுகின்ற பிச்சை. மதனை - மன்மதனை. வென்ற - அழகில் வென்ற. கழுமலத்து எம் அழகர் - சீகாழியில் அவதரித்த அழகராம் திருஞானசம்பந்தர். மதனை........ மயிலாப்பூர் :— திருஞானசம்பந்தரால் 'மட்டிட்ட புன்னையங்' எனத் தொடங்குந் தேவாரம் பாடப்பெற்ற திருமயிலாப்பூர். கழுமலத்தெம் அழகர்: "அழகமர் அருமறை ஞானசம்பந்தன்"; "அழகார் ஞான சம்பந்தன்"—சம்பந்தர் - 346; 66. மணிமொழியாடீர் - இரத்தினம் போன்ற சொற்பேசுங்கள்.

(கருத்துரை.) கபாலீசரே! உங்கள் கை வில்லோ பொன்மலை (மேரு); அதைச் செண்டாலடித்தே தங்கள் மகன் உக்கிரப்பெருவழுதி அளவற்ற பொன்னை முன்பு பெற்றான். இது மட்டுமன்றித் தாங்க ளிருக்கும் இடமே வெள்ளிமலையாயிருக்கவும், இப்படியெல்லாமிருக்கத் தாங்கள் ஏன் ஊர் சிரிக்கப் பிச்சையெடுக்கின்றீர் என்றவாறு.

> **வியாழன்வழி பட்டமையால் வெங்குருவென் பெயர்கொள்**
> **வேணுபுரத் தவரோடப்பர் விழிமிழலையிலே**
> **கியாதிஉற வாசியறக் காசுபெறக் கொடுத்தீர்!**
> **கேவலமாய் நீர்மட்டும் கேட்பதற்கேன் துணிந்தீர்!**

**தயாமுறையால் முதலவர்க்கன் றாவடுதண் டுறையில்**
**தந்தைக்கா ஆயிரம்பொன் தந்துநல்கூர்ந் தீரோ!**
**மயானமதே வீடெனக்கொள் மாதிமையீர்! சென்னை**
**மயிலாப்பிற் காபாலீ! வாக்குரைக்கிற் பீரே!** (6)

**குறிப்புரை:** வியாழன் - குருபகவான். குரு வழிபட்டமையால் சீகாழிக்கு வெங்குருவெனப் பெயர் வந்தது: "வெங்குரு விளங்கி யுமை பங்கர் சரணங்கள் பணி வெங்குரு"—சம்பந்தர்-325-4. வேணுபுரத் தவர் - சீகாழியர் - திருஞானசம்பந்தர். அப்பர் - திருநாவுக்கரசர். வீழிமிழலையில் - திருவீழிமிழலை யென்னுந்தலத்தில். கியாதி - புகழ். வாசி - வட்டம். காசு - பொற்காசு. வாசிஅற: "வாசி தீரவே காசு நல்குவீர் மாசில் மிழலையீர் ஏச லில்லையே"—சம்பந்தர். கேவலமாய் - தனியாய்; இழிவாய். கேட்பதற்கு - பிச்சை கேட்பதற்கு. தயா-தயை-கருணை. முதலவர் - இப்பாடலில் முதலிற் சொல்லப் பட்டவரான ஞானசம்பந்தர். தந்தைக்கா - சிவபாத இருதயர்க்காக. ஆவடுதண்துறை யில்......தந்து: "காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமலவூரர்க் கம்பொன் ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடு துறையனாரே"—அப்பர். திருஞான சம்பந்தரின் தந்தையார் சிவபாத இருதயர் யாகம் செய்யும் பொருட்டு ஆயிரம்பொன் வேண்டுமென அவரிடம் கேட்க, அவர் திருவாவடுதுறைச் சிவபிரானைப் பதிகம்பாடிப் பொன் பெற்றனரென்பது பெரிய புராண வரலாறு. நல்கூர்ந்தீர் - ஏழையானீர். மயானம் - சுடுகாடு. மயானமதே வீடு—"வீடு சுடுகாடு"—வள்ளிகிழவர் வாக்குவாதம். மாதிமை - அழகு. உரைக்கிற்பீர் - சொல்லுவீர்.

**(கருத்துரை.)** கபாலீசரே! ஞானசம்பந்தருக்கும், அப்பர் சுவாமி களுக்கும் திருவீழிமிழலையில் வாசிதீர்த்துப் பொற்காசுகள் கொடுத்தீரே! நீர் மட்டும் பிறரிடம்போய்க் கேட்கத் துணிந்ததேன்! சம்பந்தருக்குத் திருவாவடுதுறையில் அவர்தம் தந்தையார் யாகம் செய்யப் பொன்கேட்ட பொழுது ஆயிரம் பொற்காசுகள் தந்து ஏழையாகிவிட்டீரோ! வீடோ சுடுகாடு உமக்கு; ஒரு செலவுகூட இல்லையே என்றபடி.

**வெள்ளிமகள் கேள்வனையே மைத்துனனாப் படைத்தீர்!**
**வேணியெலாம் பொன்படைத்தீர்! மின்படைத்தீர்! மேலும்**
**வள்ளியளா யறம்வளர்த்த உமைகாமக் கோட்ட**
**வல்லியெனும் மெல்லியலை மனைவியெனப் படைத்தீர்!**
**விள்ளிமய மலையரசன் வேம்பரசன் முதலோர்**
**வெகுமதியாத் தந்தவெகு சீதனமும் படைத்தீர்!**
**வள்ளிலேவல் ஏந்தியையம் உழன்றதுமேன்? சென்னை**
**மயிலாப்பூர்க் காபாலீ! வாய்மலர்ந்தோ தீரே!** (7)

**குறிப்புரை:** வெள்ளி - சுக்கிரன். வெள்ளிமகள் - இலக்குமி; பார்க்கவன் மகளாதலின் 'பார்க்கவி' என்றே பெயர் இலக்குமிக்கு. வெள்ளிமகள் கேள்வன் - திருமால். திருமாலின் தங்கை பார்வதி; பார்வதியின் கொழுநன் சிவபிரான். ஆதலின் திருமால் சிவபிரானின் மைத்துனராளுர் என்க. "விடபட்சணர் திருமைத்துனன்"—திருப் புகழ்-1216. வேணி - சடை. வேணியெலாம் பொன்படைத்தீர் - சிவ பிரானின் சடை-பொன்னிறம்: "பொன் திரண்டன்ன புரிசடையீர்"—சம்பந்தர். பொன் என்றது சண்டுக் கொன்றை, ஊமத்தை முதலிய

வற்றையுமாம். பாடல் 10-இன் குறிப்புரையும் பார்க்க. மின் - மின் கொடி; கங்கையாகிய பெண். மின் படைத்தீர் - மின்னல் போன்ற சடை எனினுமாம். "மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ் சடை"—பொன்வண்ணத்தந்தாதி. வள்ளியள் - வள்ளல் தன்மை பொருந்தியவள். அறம் வளர்த்த உமை - காஞ்சியில் இருநாழி நெல் கொண்டு முப்பத்திரண்டறம் வளர்த்தருளினள்: "குறைவற முப்பத்திரண்டறம் புரிகின்ற பேதை"—திருப்புகழ்-404. காமக்கோட்ட வல்லியெனும் மெல்லியல் - காமாட்சி தேவி. காமக்கோட்டம் - கச்சிக் காமாட்சியம்மை கோயில். வல்லி - கொடிபோல்வாள். மெல்லியல் - பெண். மனைவியே அறம் வளர்ப்பவளாயிருக்க மணவாளர் பிச்சையெடுப்பதன் கருத்து என்னே என்றவாறு: "காரிரும் பொழிற் கச்சி மூதூர்க் காமக்கோட்ட முண்டாக நீர்போய் ஊரிடும் பிச்சை கொள்வதென்னே ஓணகாந்தன் தளியுளீரே"—சுந்தரர்-("வாரிருங்"). விள் - சொல்லப்படுகின்ற. இமயமலையரசன் - இமவான். வேம்பரசன் - வேப்பமாலை சூடும் பாண்டியன்; மலையத்துவசன். இவர்களிருவரும் சிவபெருமானின் மாமனார்களாவர். வெகுமதி - பரிசு; அன்பளிப்பு. வள் - கூர்மை. இலைவேல் - மூவிலைவேல்; சூலம். வள்......உழன்றது - சூலம் ஏந்திப் பலிக்குச் சென்றது: "படையொரு கையில் ஏந்திப் பலிகொள்ளும்"—சம்பந்தர்-222-10. வாய்மலர்ந்து - திருவாய் திறந்து. ஓதீர் - சொல்லுவீர்.

**(கருத்துரை.)** கபாலீசரே! உங்கள் மைத்துனனே(செல்வத்துக்கு அதிபதியான) திருமகளின் கேள்வன்; உம் சடையோ பொன்னிறமும் மின்னொளியும் கொண்டது. தங்கள் மனைவியே 32 அறம் வளர்த்த காமாட்சியம்மை; (போதாததற்குத்) தங்கள் மாமன்மார்களான இமவானும், மலயத்துவசனும் தந்த சீதனங்கள் வேறு தங்கட்கு உண்டு. இத்தனையுமிருந்தும் தாங்கள் என் சூலபாணியாகப் பிச்சையெடுக்கச் செல்கின்றீர் என்றவாறு.

**சனிமுதலாம் ஒன்பதுகோள் படிகளென அமையத்**
**தக்கசிங்கா தனத்திருந்த தனதசகோ தரனை**
**நுனிவிரலால் அழுத்தியன்று கயிலைபெயர்த் திடுநாள்**
**நோக்காடுஞ் சாக்காடும் நுகரவைத்தீர்! நொடியில்;**
**இனிதடியார் சுந்தரர்க்கே கேட்டபொழு தெல்லாம்**
**எங்கிருந்தோ பொன்தந்தீர்! ஏன்பலிநீர் திரிந்தீர்!**
**மனிதருள்மா ணிக்கமெனும் வள்ளுவர்வாழ் சென்னை**
**மயிலாப்பிற் காபாலீ! வந்துரைசெய் யீரே! (8)**

குறிப்புரை: சனிமுதலாம் ஒன்பது கோள் - சனி முதலியனவாகிய நவக்கிரகம். படிகள் - ஒன்பது கோள்களையே தன் சிங்காதனத்தின் படிகளாக அமைத்து அரசாட்சி செய்தான் இராவணன் என்பர். தனத சகோதரன் - இராவணன். தனதன் - குபேரன். இராவணன் குபேரனின் தம்பி. குபேரன், இராவணன் இருவரும் ஒரே தந்தைக்கு இருவேறு தாய்மார்களிடத்திற் பிறந்தவர்கள். நுனிவிரல் - (காற் கட்டை விரலின்) நுனிப்பாகத்தால். பெயர்த்திடு நாள் - பேர்த்தெடுத்த அன்று. நோக்காடு - உடல்வலி; நோய். சாக்காடு - சாவு; மரணவத்தை. நுகர - அனுபவிக்க. நொடி - ஓரிமைப்பொழுது. இராவணன் கயிலையைப் பெயர்த்தெடுக்க முயன்றபொழுது இறைவன் தம் கால் விரலால் அழுத்தி அவன் உடல் நெரிய இறந்துபட்டவன்போல்

ஆக்கிவிட்டார் அவனை. "ஆர்த்தான் அரக்கன்தனை மால்வரைக்கீழ் அடர்த்திட்டு"—அப்பர் ("போர்த்தாயங்கொர்"). இனிது - இனிய முறையில். சுந்தரர்க்கே......தந்தீர் - சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருப்புகலூர், திருமுதுகுன்றம், திருப்பாச்சிலாச்சிராமம், கச்சி ஓண காந்தன்தளி ஆகிய திருத்தலங்களில் இறைவன் பொன் தந்தருளினர். பலி - பிச்சை. மனிதருள் மாணிக்கம் எனும் வள்ளுவர் வாழ் - மனித மணியாகிய திருவள்ளுவர் வாழ்ந்த; மயிலாப்பூர் திருவள்ளுவ நாயனர் அவதரித்த தலமென்பர்.

(சருத்துரை.) கபாலீசரே! (பெருஞ்செல்வனான) இராவணனையே காலால் அழுத்தி மலைக்கீழ் நெரித்துப் பாடங் கற்பிக்கவல்லவர் நீர்; ஆனல் அடியாராயிருந்த ஆரூரருக்கு எவ்வெவ்விடங்களிலெல்லாம் பொன் கேட்டாரோ அவ்வவ்விடங்களிலெல்லாம் எங்கிருந்தோ கொணர்ந்து பொன் கொடுத்தீர். இப்படியிருக்க, நீர் மட்டும் என் பிச்சை ஏற்கின்றீர் என்றவாறு.

**இராகுவின்கா லங்குளிகன் எமகண்டம் சூலை**
**இயம்புதிதி வாரநட்சத் திரயோகங் கரணம்**
**இராசிகள்பன் னிரண்டினைய எல்லாம்நும் மடியார்க்**
**கினியனவே துனியலதூ ரிருதயத்தூ டுறலால்;**
**தராதலத்திற் பிறந்தறியீர்! சாதகமில் நுமக்குத்**
**தலைவிதியோ! சிவனென்பேர் பொய்கொல்!பலி யுமைபால்**
**வராணசியிற் கேட்டதுமேன்? மதிவிழவார் சென்னை**
**மயிலாப்பூர்க் காபாலீ! வசனமுரை யீரே!**　　(9)

குறிப்புரை: இராகுவின் காலம் - இராகுகாலம் குளிகன் -குளிகன் என்ற கோளின் காலம். எமகண்டம் - கெட்ட நேரம். சூலை - வார சூலம். இயம்புதிதி - பிரதமை முதலாகச் சொல்லப்படுகின்ற பதினைந்து திதிகள். வாரம் - ஏழு கிழமைகள். நட்சத்திரம் - 27 நாட்கள். யோகம் - அமிருத, சித்த, மரண யோகங்கள் மூன்று. விஷ்கம்பம் முதலாக வைதிரு ஈருக உள்ள 27 யோகங்கள் எனினுமாம். கரணம் - பவம் முதலான 11 கரணங்கள். இராசிகள் பன்னிரண்டு - மேடம் முதலாக மீனம் ஈருகச் சொல்லப்படும் பன்னிரண்டு இராசிகள். இனைய-இப்படிப் பட்ட. துனி அல - துன்பமல்ல. நீர் இருதயத்தூடு உறலால் - தாங்கள் உள்ளத்தில் வீற்றிருப்பதால். சிவனடியார்களுக்குத் தீக்கோள்களுட் பட எல்லாம் நல்லனவே செய்யும் என்பதைத் திருஞானசம்பந்தர் பாடிய "வேயுறு தோளிபங்கன்" எனத் தொடங்கும் பதிகமுழுமை யிலுங் கண்டுகொள்க. தராதலம் - பூமி. பிறந்து அறியீர் - சிவபிரான் பிறப்பெடுத்தறியாதவர்: "பிறவா யாக்கைப் பெரியோன்"—சிலப்பதி காரம்; "சோணேசர் இல்லிற் பிறந்த கதையுங் கேளேம் பேருலகில் வாழ்ந்துண் டிறந்தகதையுங் கேட்டிலேம்"—அருணகிரியந்தாதி-70. சாதகம் - ஜாதகக் குறிப்பு. இல் - இல்லாத. பிறவாதவர்க்குச் சாதகமுங் கிடையாது என்க. சிவன்-மங்களகரமானவன். பேர் இவ்வாறு இருக்க அமங்களகரமாகக் கபாலமேந்திப் பிச்சையேற்பது கண்டு பேர் பொய் கொல் (பொய்யோ) எனப்பட்டது. பலி - பிச்சை உமைபால் - விசாலாட்சியம்மையிடத்து. வராணசி - வருணை, அஸி என்னும் இரு நதிகளின் கூடுதுறையிலமைந்த காசித் தலம். சிவபிரான் பிச்சை கேட்கவும், காசியில் தேவி அன்னபூரணியாயிருந்து பிச்சையிட்ட

தாகவும் ஒரு வரலாறு. "வண்டலை நெடுங்குழல் மணிக்கரு மணாலதோ, கொண்டலை ஒத்ததோ என்னுமா கொண்டவள், வெண்டலை யிடுபலி ஏற்றஎம் வேதியர்" எனச் சங்கரன் கோயில் அருட்புகழில் வருவதூஉங் காண்க. மதி விழவு - மாதந்தோறும் திருவிழா; ஆண்டுக்குப் பன்னிரு திருவிழாக்கள் மயிலையில் நிகழ்ந்ததாகச் சம்பந்தர் பாடிய 'மட்டிட்ட' எனத் தொடங்கும் திருப்பதிகத்தால் தெரியவருகின்றது. ஆர் - பொருந்திய. வசனம் - பேச்சு.

(கருத்துரை.) கபாலீசரே! கெட்ட கோள்களோ, அல்லது பஞ்சாங்கத்தின் ஐந்து அங்கங்களோ எதுவும் நீரிருக்கும் உள்ளம் படைத்த நம் அடியார்களுக்கே நல்லது செய்யுமென்றிருக்கப் பிறக்கவுமில்லாத, பிறந்தபின் எழுதப்படும் சாதகமுமில்லாத தங்களுக்குப் பிச்சையெடுக்கும் தலைவிதி எங்கிருந்து வந்தது? 'சிவ'னென்ற தங்கள் பெயரும் பொய்யோ? காசியில் அன்னபூரணியம்மையிடம் பிச்சை கேட்டது என்? என்றவாறு.

**கேதுவின்மால் கெடஅரிசிற் கரையழகார் புத்தூர்க்**
**கிழவர்புகழ்த் துணைக்குநித்தம் படிக்காசு கொடுத்தீர்!**
**ஓதுமொரு தருமிக்குப் பொற்கிழியன் றளித்தீர்!**
**உலகிருநூற் றிருபத்து நான்குமும தாட்சி;**
**போதுசடைக் கனகிகொன்றை பொன்சொரியும் போது**
**பூதலத்தில் மாடேறிப் புக்கதுமேன்? பலிக்கே;**
**மாதுபுகழ்ப் பூம்பாவை மரித்தெழுந்த சென்னை**
**மயிலாப்பிற் காபாலீ! வாய்மைவிளம் பீரே!** **(10)**

குறிப்புரை: கேது - ஒன்பதாம் கோள். கேதுவின் மால் - கேதுவால் ஏற்படும் துன்பம் முதலிய மயக்கங்கள். 'கேதுவைப்போல் கெடுப்பாரில்லை; ராகுவைப்போற் கொடுப்பாரில்லை' என்பது பழமொழி. "ஸர்வோபத்ரவ காரகாய நம:"—கேது அஷ்டோத்ர சதநாமாவளி. கேது முத்தி கொடுப்பவனுங்கூட. உலகியலில் மிகுதியாக வறுமை முதலிய துன்பங்கள் ஏற்படும்படி செய்து முத்திசேர வைப்பவன் கேது. கேதுவில் மால், அஃதாவது கேதுவோடு சேர்ந்த மால் என்பதுமாம். மால் - புதன். கேதுவும் புதனும் ஒன்று சேர்ந்தால் அந்த ஜாதகக்காரனுக்கு ஏற்படும் துன்பத்திற்கு அளவில்லையாம். இப் பாடலிலிருந்து புகழ்த்துணை நாயனார், ஜாதகப்படி கேது தசாபுக்தியிலோ அல்லது கேதுவும் புதனும் சேர்ந்திருந்த தசையிலோ வறுமையால் வாடியிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. உலகியலில் கோள்களால் அவர்க்கேற்பட்ட துன்பத்தைக் கெடவைத்துப் படிக்காசு தந்தனர் சிவபிரான் என அறியவேண்டியுள்ளது. அரிசிற்கரை - அரிசிலாற்றங்கரை. அழகார் புத்தூர் - அரிசிற்கரைப் புத்தூர்; இது நாச்சியார் கோயிலிலிருந்து கும்பகோணம் போகும் வழியிலுள்ளது; மூவர் தேவாரம் பெற்றது. இவ்வூரில்தான் புகழ்த்துணை நாயனார் வாழ்ந்து வந்தார். கிழவர் - உரியவர். புத்தூர்க்கிழவர் - புத்தூர்க்குரியவர். புகழ்த்துணை - அறுபத்து மூவருள் ஒருவரான புகழ்த்துணை நாயனார். படிக்காசு - கோயில் திருவாயிற்படியில் பூத கணங்களின் மூலம் வைக்கப்படும் பொற்காசு. புகழ்த்துணையார் படிக்காசு பெற்றமை:

"அலந்த அடியான் அற்றைக் கன்றோர் காசெய்திப்......போற்றும் புத்தூரே"—சம்பந்தர் - "நிலந்தண்". "வகுத்தவனுக்கு நித்தற் படியும்

வருமென் றொருகாசினை நின்ற நன்றிப் புகழ்த்துணை கைபுகச் செய்துகந்தீர் "—சுந்தரர் - " அகத்தடிமை". ஓதும் - சொல்லப்படுகின்ற; அல்லது உம்மையே ஓதிவழிபட்ட. ஒரு - ஒப்பற்ற. தருமிக்குப் பொற்கிழி - தருமி என்ற அந்தணனுக்குப் பொன் முடிப்பு. இது 'தருமிக்குப் பொற்கிழியளித்த திருவிளையாட'லைக் குறிக்கும். உலகு இரு நூற்று இருபத்து நான்கு - 224 புவனங்கள்: "இருநூற்றிருபத்து நான்காம் புவனமும் ஈன்ற அம்மே"—வைணவி எண்ணெழுத்து மாலை - 240. புவனங்கள் சுத்தமென்றும், அசுத்தமென்றும் இருவகை. (1) சுத்தம்:— சாந்த்யாதீத கலையில் 15, சாந்தி கலையில் 18; (2) அசுத்தம்:—வித்யா கலையில் 27, பிரதிஷ்டா கலையில் 56, நிவர்த்தி கலையில் 108; ஆக 224 புவனங்கள். உலகிரு ஆட்சி: "மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி"—சுந்தரர் - திருநாகை - 9. கனகி கொன்றைப்போது சடை எனக் கூட்டுக போது - மலர். போது சடை - தும்பை, ஆத்தி முதலிய பூக்களணிந்த சடை; அல்லது கங்கையானவள் போந்து அமர்ந்துள்ள சடை; அல்லது சடைபோது - சடையிலே (வருகின்ற) இருக்கின்ற. கனகி - ஊமத்தை. கொன்றை, ஊமத்தை இரண்டும் பொன்னிற மலர்களாதலின் சடையிலே பொன்னைச் சொரிவதுபோலக் காட்சியளித்தன என்க. கொன்றையும் பொன்னும்:—"விரைசேர் பொன் இதழிதர"—சம்பந்தர் ("உரைசேரும்"). ஊமத்தம் பூவும்பொன்னும்:— "பொன்பொதி மத்தமாலை"—சம்பந்தர் ("ஒன்பதொ"). சொரியும் போது - பொழிகையில். மாடு ஏறி - இடபத்தின் மீது ஏறிக்கொண்டு. பலிக்கு மாடேறிப் புக்கது:—இடபமீதேறிச் சிவபிரான் பலிக்கு வருவர்: "இடபம் ஏறி நித்தம் பலிகொள்வர்"—அப்பர் - 230-1. மாது புகழ்ப் பூம்பாவை - புகழ்பெற்ற பூம்பாவையாகிய மாது. மரித்து எழுந்த - இறந்து, பின் உயிர்பெற்றெழுந்ததான, திருமயிலைச் சிவநேச செட்டியாரவர்களின் திருப்புதல்வியான பூம்பாவை பூஞ்சோலையிற் பூக்கொய்துகொண்டிருந்தகாலை அரவு தீண்ட, இறந்துபட, அவளை ஞானசம்பந்தர்க்கு அர்ப்பணிக்கவே வளர்த்துவந்த செட்டியார் அவள் எலும்புகளை எடுத்தொரு குடத்திலிட்டுக் காப்பாற்றி வந்தனர். திருவொற்றியூர்க்குப் பிள்ளையார் எழுந்தருளியது கேட்டு அவரைத் தக்க மரியாதைகளுடன் திருமயிலைக்கு வரவழைத்து நிகழ்ந்ததைக் கூறி, அக் குடத்தை அவராணையின் வண்ணம் கோயில் மதிலுக்கு வெளிப் புறத்தில், இறைவன் திருமுன்புக்கு நேரே வைக்கவும், ஞானசம்பந்தர் 'மட்டிட்ட' எனத் துவக்கும் தேவாரப் பதிகத்தைப் பாட, பாடலுக்குப் பாடல் அங்கங்களெல்லாம் வளர்ந்து அழகுருவமாகிப் பானை பிளக்கப் பூம்பாவை எழுந்து நின்று இறைவனை வணங்குதலைக் கண்டனர் உலகத் தனைவரும். அவளை வருக என அழைத்ததை,

> "மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
> அண்ண லாரடி யார்தமை அமுதுசெய் வித்தல்
> கண்ணி னாலவர் திருவிழாப் பொலிவுகண் டார்தல்
> உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்"
>
> (பெரிய புராணம்—சம்பந்தர்.)

என்ற பாடலிற் கண்டுகொள்க. அங்ஙனம் எழுந்த பிறகும், சிவநேசர் பூம்பாவையை என்றருள்க எனச் சம்பந்தரை வேண்ட, அவளைத் தாமே உயிர்பெற்றெழச் செய்ததால் தமக்கு மகளாம் முறையாயினளாதலின் அன்பு மகளாக ஏற்றுக்கொண்டருளினர் பிள்ளையார். விரிவைப் பெரிய

புராணத்திற் கண்டுகொள்க. வாய்மை - வாய்ச்சொல்; உண்மையுமாம். (வாய்மை - வாயாற் பொய்யாதிருத்தல். உண்மை-உள்ளத்தாற் பொய்யா திருத்தல். மெய்ம்மை - உடலாற் பொய்யாதிருத்தல்.)

(கருத்துரை.) கபாலீசரே! தாங்கள் புகழ்த்துணை நாயனாருக்குப் படிக்காசு கொடுத்தீர்; தருமிக்குப் பொற்கிழி தந்தீர்; எல்லா உலகங்களுமே உமது ஆட்சிக்குட்பட்டன; சடைமேலும் பொன் சொரியப் பெற்றுள்ளீர்; இப்படியிருந்தும் ஏன் விடைமேலேறிப் பலியேற்கின்றீர்? உண்மையைத் தெரிவியுங்கள் என்றவாறு.

கனல்பபதி கதிரெனுமும் மண்டலத்தும் உறைவீர்!
  கனகசபை ரசதசபை ரத்நசபை உடையீர்!
புனலுடையீர்! பொன்விளையும் பூவுடையீர்! பொழியும்
  புயலுடையீர்! பெயலுடையீர்! உயிருடையீர்! புகலும்
அனலுடையீர்! வளியுடையீர்! வெளியுடையீர்! அனைத்தும்
  ஆளுடையீர்! அப்படியும் ஐயமுழன் றதுமேன்?
மனவாயி லார்நாய னார்வாழ்ந்த சென்னை
  மயிலாப்பூர்க் காபாலீ! வாய்ச்சொலரு ளீரே! (11)

குறிப்புரை: கனல் - தீ. பபதி - சந்திரன். கதிர் - சூரியன். மும்மண்டலம் - அக்கினி மண்டலம், சந்திர மண்டலம், சூரிய மண்டலம் ஆகிய மூன்றுமாய்ச் சிவபிரானே இருப்பர். 'அருநிலைய திங்களாய் ஞாயிறாகி'; 'தீயாகி'—அப்பர்—"இரு நிலனாய்த்"; "தீயாகி". கனக சபை - பொன்னம்பலம்; சிதம்பரம். ரசத சபை - வெள்ளியம்பலம்; மதுரை. ரத்ந சபை - மணியம்பலம்; திருவாலங்காடு. புனல்-நீர். பொன் விளையும் பூ - பொன் வெட்டியெடுக்கப்படுகின்ற பூமி. பொழியும் புயல்-மழை பெய்யும் மேகம். புயலுடையீர் - (சடையில்) மேகமுடையீர். "மழை .....புல்கு வார்சடை" — சம்பந்தர் - 318-3. பெயல் - மழை. உயிர் - இயமானன்; ஆன்மா. அனல்-தீ. வளி - காற்று. வெளி-ஆகாயம். இப் பாடலிற் சொல்லப்பட்டுள்ள, பபதி, கதிர், புனல், பூ, உயிர், அனல், வளி, வெளி ஆகிய இவையெட்டும் சிவபிரானது அட்டமூர்த்தங்களைக் குறிப்பன: "இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய்யெறியுங் காற்று மாகி அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமாயட்ட மூர்த்தியாகி"— அப்பர். புயலுடையீர் பெயலுடையீர்: "வெண்முகிலாய் எழுந்து மழை பொழிவான் தன்னை"—அப்பர்-259-2. அனைத்தும் ஆளுடையீர்- "அனைத்து வாய்தல் உள்ளார்"; "இமையோர் பெருமான் இலாத தென்னே"—அப்பர்-140-4; 310 9. ஐயம் - பிச்சை. மன - மன்ன; நிலைபெற. வாயிலார் நாயனார் - இவர் திருமயிலாப்பூரில் வாழ்ந்தவர்; அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்; மனக்கோயிலில் சிவபிரானை வைத்துப் பூசித்து முத்திபெற்றவர். மனவாயிலார் என்பதற்கு, மனவாய்-மனத்திலே, இ(ல்)லார் - சிவபிராற்கு இருப்பிடமாகக் கோயில் அமைத்தவராகிய, நாயனார் எனினும் பொருந்தும். வாயிலார் மனக்கோயிலமைத்தது: "மனக்கோயில் உள்ளிருத்தி"; "நீடுமன ஆலயத்துள்"— பெரிய புரா. 51-8; 10.

(கருத்துரை.) கபாலீசரே! முச்சுடரிலும் வீற்றிருப்பவர் நீர்; நீர் ஆடிய மன்றங்களோ ஒன்று பொன்; ஒன்று வெள்ளி; ஒன்று ரத்தினம். மேலும், நீர், பொன் விளையும் பூமி, மேகம், மழை, உயிர்கள், தீ, காற்று,

ஆகாயம் அனைத்தையும் ஆட்சி செய்பவர் நீர். அப்படி இருந்தும் தாங்கள் பிச்சை புகுந்தது ஏன்? என்றவாறு.

**உடுக்குலமும் புயலிடியும் அடுக்கடுக்கா யுலகும்**
**ஒளியுமருள் அளியுமுள்ளக் களியுமிக உடையீர்!**
**மிடுக்குடையீர்! நான்மறையுங் கோவணமா உடையீர்!**
**விளைபொருள்நீள் கடலுடையீர்! மலையுடையீர்! ஏனோ?**
**கொடுக்கையன்றி ஏற்பதுவுங் குலத்தொழிலாக் கொண்டீர்!**
**கொடுத்தவெல்லாம் நும்மதென்றே காட்டுவதன் பொருட்டோ!**
**வடுக்களுதிர் மாம்பொழில்கள் மழையழைக்குஞ் சென்னை**
**மயிலாப்பிற் காபாலீ! வாசகஞ்சொல் லீரே!** (12)

**குறிப்புரை:** உடுக்குலம் - நட்சத்திரக் கூட்டம். புயல் - புயற் காற்று. புயல் - மேகம் எனலுமாம். சிவபிரானே நட்சத்திரமாயும் இடியாயு மெல்லாம் இருப்பார்: "திருந்தொளிய தாரகையும்......ஆய பெருந்தகை"—அப்பர் 214-4. "முழங்கி உருமென...... மின்னி இடித்தவன்காண்"—அப்பர் 277-8. அடுக்கு அடுக்காய் உலகும் - அடுக் கடுக்காக உள்ள அண்டாண்டங்கள்; அண்டரண்டங்கள்: மூதண்டங் கள்; பேரண்டங்கள்; மற்ற கண்டங்கள் முதலியனவாம். அருள் அளி - அருளும், அன்பும். உள்ளக்களி - மனமகிழ்வு. மிடுக்கு - வலிமை. நான்மறையுங் கோவணமா: "வேதப்பொற் கோவண ஆடையர்"— திருப்புகழ்-881; "மறையே நமது கோவணமாம்"—திருவிளை. உலவாக் கிழி-9; "மறை நான்கே வான்சரடாத், தன்னையே கோவணமாச் சாத்தி னன்காண் சாழலோ"—திருவாசகம்-சாழல்-2. விளைபொருள் நீள்கடல்- பலபொருள்கள் விளையும் கடல். கடலுடையீர், மலையுடையீர்—"கனை கடலைக் குலவரையை"—அப்பர் ("அரியானை"). கொடுக்கை - கொடுத் தல். ஏற்பது - பிச்சை ஏற்றுக்கொள்வது. குலத்தொழில் - சிறந்த தொழில்; குடித்தொழில் எனினுமாம். கொடுத்த எல்லாம் - இதுகாறும் உலகுக்குக் கொடுக்கப்பட்டன எல்லாம். நும்மது - தங்களுடையது. காட்டுவதன் பொருட்டோ குலத்தொழிலாக் கொண்டீர் என அந்வயிக்க. வடுக்கள் - மாவடுக்கள். மழை - மழையை அல்லது மேகத்தை.

(கருத்துரை.) கபாலீசரே! நட்சத்திரம், புயல், இடி, பல அண் டங்கள், ஒளி, அருள், அன்பு, மகிழ்ச்சி எல்லாம் உடையவரே! வலிமை யுடையீர்! நால் வேதமுமே தங்கள் கோவணம்; கடல், மலையெல்லாம் உம்முடையன. இப்படியிருந்தும், கொடுப்பதைத் தவிர வாங்கிக்கொள் வதும் ஒரு தொழிலாக வைத்துக் கொண்டதும் ஏன்? எல்லாம் தங்கட்கே உரியன என்று காட்டும் பொருட்டோ அவ்வாறு செய்தீர் என்றவாறு.

**மின்னலுடன் மின்திறலும் மின்னொளியும் உடையீர்!**
**மிகுநிதியைந் தருகாரா மணியிவையும் உடையீர்!**
**அன்னமுன்குண் டோதரனுக் கருள்செய்தீர்! கேட்டோர்க்**
**கன்றுலவாக் கிழியுலவாக் கோட்டையருள் செய்தீர்!**
**இன்னமுதங் கச்சூரில் இரந்தளித்தீர் ஒருவர்க்**
**கின்னமுமாண் டுக்கொருநாள் நீரிரப்ப தேனோ?**
**மன்னஅறு பான்மூவர் விழாச்சிறப்பார் சென்னை**
**மயிலைக்கா பாலியரே! வாய்மலர்விள் ளீரே!** (13)

குறிப்புரை: மின்னல்......உடையீர்: "மின்னானாய் உருமானாய்"— அப்பர்-13-8. மின் திறல் - மின்சார சக்தி. மின் ஒளி - மின்சார ஒளி. மிகுநிதி - கொடுப்பதால் புகழ்மிகுந்த இருநிதிகள்—சங்கநிதி, பதுமநிதி; நவநிதிகள் எனலுமாம். ஐந்தரு-சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம் என்னும் ஐந்து தெய்வ தருக்கள். கார்-(எழு) மேகங்கள். ஆ - பசு; காமதேனு. மணி - தெய்வத ரத்தினம்; சிந்தாமணி. அதிமதுரக் கவிராயர் பல்லக்கில் போய்க்கொண்டிருக்கையில் தன் சீடனை நோக்கி, மேகம், பசு, ரத்னம் மூன்றும் வாங்கிவா என ஒரு கடைக்கனுப்பினார். அவன் அப்படியே வந்து கடையிற் கேட்கக், கடைக்காரர் விழிக்கையிலே அங்கே நின்றுகொண்டிருந்த காளமேகப் புலவர் 'காராமணி'யைக் கொடுத்தனுப்புக என்று தெரிவித்தருளினார் என்ப. கார் - மேகம். ஆ - பசு. மணி - ரத்னம். பாடல் 2 - இற்சொன்ன வண்ணம் ஆயிரங்கண் இந்திரனே சிவபிராற்கு அடிமையாயினமையால் அவனுக்குரிய தேவலோகப் பொருள்களெல்லாம் சிவனார்க்கே உரிமையாயின என்க. அன்னம் முன் குண்டோதரனுக்கு அருள்செய்தீர் - தடாதகைப் பிராட்டியார் திருமணத்தின்போது சமைக்கப்பட்ட அன்னம் மிகுதியாக மீந்திருந்ததனால், உண்பாரின்றி வீணாபோது தடாதகையார் சிவபிரானிடம் வேண்ட, அவர் குண்டோதரனை அழைத்து அவ் வன்னத்தைத் தின்னும்படி செய்தனர்.

"அடுக்க நின்றகுண் டோதரன் அகட்டிடை வடவை
மடுக்க வுன்னினான் அதுவந்து வயிற்றெரி பசியாய்த்
தொடுக்க ஆலமுண் டாங்குடல் சோர்ந்துவேர்த் தாவி
ஒடுக்க முற்றைய பசியினா லுயங்கினே னென்றான்"

"குடையெ டுக்குமிக் குறியதாட் குறட்கொரு பிடிசோ
றிடமி னப்புறஞ் சோறுமா லெனத்தொழு தெல்லாம்
உடைய நாயகி போயினாள் குறியனும் உடனே
நடைத ளர்ந்துகண் புதைந்துவாய் புலர்ந்திட நடந்தான்."

—திருவிளை-7-10, 11.

கேட்டோர்க்கு அன்று உலவாக் கிழி அருள் செய்தீர்: குலபூடண பாண்டியன், நாட்டில் பஞ்சமேற்பட, இறைவனை மதுரையில் வேண்டி உலவாக்கிழி பெற்ற திருவிளையாடல் இது. "உம்மைப் பயன்போல் எளி வந்தார் உலவாக் கிழியொன் றுதவுவார்"—திருவிளை-31-12.

உலவாக்கோட்டை அருள் செய்தீர்—'அடியார்க்கு நல்லான்' என்ற வேளாளருக்கு அன்னதானம் செய்ய முடியாமற்படி நிலவிளைவைக் குன்றவைத்து, அவர் பெருமையை உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டி, அவர் தம் அறத்துக்கு ஊறு வந்ததே என வருந்துங்காலை செந்நெல் லாலாய அரிசிக்கோட்டை (உலவாக்கோட்டை) ஒன்று அருளிச் செய்தார்.

"பஞ்சாதி வேதப் பொருள்சொன்ன பரமன் வாக்கொன்
றஞ்சாதி வேளாண் டலைவாவு ணகத்தி லின்றேர்
செஞ்சாதி யாய செழுவாலரிக் கோட்டை யுய்த்தேம்
எஞ்சா திருக்கு மெடுக்குந்தொறு மென்று மாதோ"

—திருவிளை-38-13.

இன்னமுதம் - இனிய உணவு. கச்சூர் - திருக்கச்சூர் ஆலக்கோயில். இரந்து அளித்தீர் - பிச்சையெடுத்து உணவிட்டீர். ஒருவர் - சுந்தர மூர்த்தி சுவாமிகள். இன்னமுதம்........ஒருவர்க்கு - சுந்தரமூர்த்தி சுவாமிகள் பசியால் வருந்தியிருந்தபொழுது சுவாமி பிராமண வீடுகள் தோறுஞ்சென்று அன்னம் யாசித்துக் கொண்டுவந்து அளித்தருளிய தலம் திருக்கச்சூர்: கோயில் பிரகாரத்தில் 'விருந்திட்ட ஈசுரர்' என்ற இலிங்கம் இருக்கின்றது. இன்னமும்........ஏனோ - இன்னுங்கூட வருடத்துக்கொருநாள் நீர் பிச்சாடனர் திருக்கோலங்கொண்டு (திருவிழார்கொண்டாடி) திருவீதியுலா வருதல் ஏனோ! மன்ன-நிலைபெற; நன்றாக. அறுபான் மூவர் - அறுபத்து மூன்று நாயன்மார்கள். விழாச் சிறப்பு - அறுபத்து மூவர் திருவிழா மயிலையிற் சிறப்புடைத்து. மயிலைக் காபாலியரே - மயிலாப்பூர்க் கபாலீசரே. வாய்மலர் விள்ளீர் - வாய்மலர் திறவீர்.

(கருத்துரை) கபாலீசரே! மின்னல், மின்விசை, மின்னொளி அனைத்தும் உடையவரே! இருநிதி, ஐந்தரு, எழுமேகங்கள், காமதேனு, சிந்தாமணி எல்லாம் உடையவரே! முன்பு குண்டோதரனுக்கு அன்னக் குழியிட்டவரே! குலபூடண பாண்டியற்கு உலவாக் கிழியும், 'அடியார்க்கு நல்லான்' என்ற வேளாளற்கு உலவாக்கோட்டையும் அருள் செய்தவரே! திருக்கச்சூரில் சுந்தரர்க்குப் பிச்சையெடுத்து அன்னமளித்தீர். அப்படியும், இன்னமும் ஆண்டுக்கொருநாள் பிச்சாடனராக வருவது ஏனோ என்றவாறு.

## கற்பகாம்பிகையம்மை திருமுன்

பைரவி] [சுத்தாங்கம்

### ஒருபா ஒருபஃது

### கட்டளைக் கலித்துறைப் பதிகம்

பண்ணார் மொழித்தமிழ் எந்நாளும் பாடும் பணியுமன்பும்
விண்ணாள் பவரினும் மேலான செல்வமும் மேதினிமேல்
எண்ணாள் பலஇருந் தாலும் உனைமற வாஇயல்பும்
கண்ணார் மயிலையிற் கற்பகமே! தந்து காத்தருளே! (14)

அருளேது மின்றி அலமந்தெ நாளும் அலறுவதிற்
பொருளேது? நெஞ்சே! புகல்வது கேட்கிற் புகழ்பெறுதி!
மருளேது மின்றி மயிலையிற் கற்பக வான்கொடியைத்
தெருளே துலங்கத் திருப்புகழ் பாடிச் செபஞ்செய்வையே! (15)

செய்வதெல் லாமுன் திருப்பணி யாஎன்றன் தேகத்திலே
பெய்வதெல் லாமுன்றன் பூசனை யாநான் பிறரைநித்தம்
வைவதெல் லாமுனை வாழ்த்துவ தாக மயிலையில்வாழ்
தைவதமே!தமிழ்க் கற்பக மே!வந்து தாங்கிக்கொள்ளே! (16)

குறிப்புரை: தைவதம் - தெய்வம். 'நான்செய்யுஞ் செயல்யாவும் உன்செயலாகவே கொள்க' என்பது கருத்து.

தாங்கிக்கொண் டாலும் தயவுவைக் காமலென் றன்னுயிரை
வாங்கிக்கொண் டாலும் மயிலையிற் கற்பக மாமயிலே!
ஏங்கிக்கண் டேனன்றி ஏதும் பயன்காண் கிலனினிது
தூங்கிக்கண் டேனிலன் எல்லாம்உனது துரைத்தனமே. (17)

குறிப்புரை: இனிது தூங்கி - தூங்காமல் தூங்கி - "தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்"—அருளையர்.

தனமே! எவர்க்குந் தரணியில்; பூவிற் றவள நிறத்
தனமே! இராமன்முன் ஐப்பசி ஓணத் தணிவிழச்செய்
வனமே நிறைந்த மயிலையிற் கற்பக மாங்குயிலே!
மனமே புகுந்தென்றும் நீங்காமல் நிற்றி! மதித்தெனையே. (18)

குறிப்புரை: தவள நிறத்து அ(ன்)னமே-வெள்ளையன்னப்பேடே. அணிவிழ - அணிவிழா. இராமன்........செய்: ஸ்ரீராமர் ஐப்பசி ஓணத்தில் திருமயிலையில் திருவிழாச் செய்ததாகத் தலபுராணங்கூறும்; சிவஸ்தல மஞ்சரியும் பார்க்க.

எனையழைத் தின்றுன் தரிசனந் தந்த எளிமையென்னே!
நினையழைத் தென்றுந் தவஞ்செய்கி லாநெறி நின்றிருந்தும்
புனைவனத் தூடு மயிலைக் கபாலியைப் பூசனைசெய்
தனையனைக் கற்பகமே!கற் பகம்போல் தருவதென்றே. (19)

குறிப்புரை: புனைவனத்தூடு - புன்னைவனத்தில். செய்தனை - செய்தாய். அனைக்கற்பகமே - அன்னையாகிய கற்பகவல்லியே!

என்றேனும் நானொரு புண்ணியஞ் செய்திருப் பேனெனிலஃ
தின்றே பலித்தது கண்டுகொண் டேனுன் எதிர்நிற்பதால்
மன்றே அனைய மயிலையிற் கற்பக வண்கிளியே!
நன்றே நினைத்திடும் நாட்டமெற் கென்றென்றும் நல்குவையே!

குறிப்புரை: மன்று - சிதம்பரம்.

குவையாய்க் கனகத்தைக் கொட்டும் உனது குரைகழல்கள்
அவையோ விரும்பினன் நாயடி யேனஃ தலஅதனாற்
சிவையே! மயிலையிற் கற்பகக் கொம்பே! திருவருளின்
சுவையே விழைந்தனன் தோன்றுமற் றேன்றித் தொகுத்துவையே!

குறிப்புரை: குவை - குவியல். தொகுத்துவை - தொகுத்து வைப்பாயாக.

வையேன் உனது மலரடி சிந்தையுள் வாழ்த்துவதுஞ்
செய்யேன் பிறவியை விணாகச் செய்யச் சனித்துளனே!
ஐயே! மயிலையிற் கற்பக மாங்கொடி யாயமர்ந்தாய்!
கையே சிரம்வைத்துன் காலால் விதியைக் கலைத்தழியே! (22)

குறிப்புரை: வையேன் - வைக்கமாட்டேன். ஐயே - தலைவியே; தூர்க்கையே. கையே சிரம்வைத்து - அத்ததீக்கை அருளி.

(தொடரும்)

# சங்ககாலச் செய்யுள் நடை

[திரு. ச. கணபதி முதலியார், எம். ஏ., எல். டி.]

(செல்வி சிலம்பு ௩௯, பரல் ௧0, ௪௮௨ ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே கலப்புமொழி பேசிச் செம்மாந்திருக்கும் சில தமிழர்களுக்கு அந்நாளின் தூய தமிழ் இருப்புக்கடலையாகத் தோன்றுவதில் வியப்பொன்றுமில்லை. மற்றும் சங்ககாலச் செய்யுள்கள் சொற்செட்டில் அமைந்தவை. அவை சுருங்கச் சொல்லிப் பொருள்களை விளங்க வைப்பவை; எல்லாச் சொற்களும் இன்றியமையாதவையே; வேண்டப்படாத சொற்கள் யாண்டும் காணமுடியா; ஒருசொல்லை எடுப்பினும் விடுப்பினும் பொருள் நயம் குன்றும், சிதையும்; ஒரு சொல்லைப் புகுத்தற்கும் சிதைத் தற்கும் ஆண்டு இடம் கிடையா. இந்நுணுக்கங்களை நேர்மைத் திறத்தோடு அறியமாட்டாத சிலர்க்கு அக்கால நடை கடின நடையாகத் தோன்றும். நிற்க.

சங்ககாலச் செய்யுள்கள் பிற்காலக் காவியங்கள் போலப், புராணங்கள்போல வரலாற்று முறையில் பல ஆயிரம் பாடல் களில் ஒரு வீரனது அல்லது பல வீரர்களின் செயற்கரிய வீரச் செயல்களை எடுத்துக் கூறும் தன்மையனவல்ல. அவை தனிச் செய்யுள்கள் (Lyrics); திணைப் பொருள்களைப் பற்றிக் கூறுபவை; அகம் புறம் பற்றியவை. பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள், பரிபாடல், கலித்தொகை நீங்கலாக மற்றைய சங்கச் செய்யுட்களெல்லாம் 'அகவற்பாக்க'ளாலேயே ஆக்கப்பெற்றவை. நற்றிணை ௪0௧ அகவற்பாக்களை யுடையது; அவ்வகவற்பாக்கள் ஒன்பது அடிச் சிற்றெல்லையும் (Minimum) பன்னிரண்டடிப் பேரெல்லையும் (Maximum) கொண்டவை; குறுந்தொகை ௪0௨ அகவற்பாக்களைக் கொண்டிலங்குவது; பாக்கள் நாலடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையு முள்ளவை.

ஐங்குறுநூறு 501 அகவற்பாக்களையுடையது. பாக்கள் மூன்றடிச் சிறுமையும் ஆறடிப் பெருமையும் கொண்டவை. அக நானூறு 401 அகவற்பாக்களைக் கொண்டு மிளிர்வது. பாக்கள் பதின்மூன்றடிச் சிறுமையும் முப்பத்தோர் அடிப் பெருமையும் உடையவை; புறநானூறு 400 அகவற்பாக்களை உள்ளிட்டது. பாக்கள் நாலடிச் சிறுமையும் முப்பத்தைந்தடிப் பெருமையும் உள்ளவை. பதிற்றுப் பத்துச் சேரவரசரைப் பற்றியது. கடவுள் வாழ்த்தும், முதற்பத்தும், பத்தாம் பத்தும் கிடைத்தற்கில்லை.

## பத்துப்பாட்டு

"நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
ஏறிய வடியி னீரைம் பாட்டுத்
தொடுப்பது பத்துப் பாட்டெனப் படுமே"

என்பதால் நூறடிச் சிற்றெல்லையை யுடையது; பேரெல்லை இவ்வளவிற்றென்று கூறப்பட்டிலது. "ஓங்கிய வதுதா னகவலின் வருமே" என்றதால் அவைகளும் அகவற்பாக்களிலே புனையப்பட்டுள்ளன என்பது வெள்ளிடைமலை. முல்லைப்பாட்டே அடியளவில் சிறியது, ௧0௩ அடிகளைக் கொண்டது; மதுரைக் காஞ்சியே அடியளவால் பெரியது, ௭௮௨ அடிகளைப் பெற்றுள்ளது. பத்துப்பாட்டு ஐந்து ஆற்றுப்படைகளைக் கொண்டது; இரு பாட்டுக்களையுடையது, ஒரு வாடையையுடையது, ஒரு கடாத்தைக் கொண்டது, ஒரு பாலையைக் கொண்டது, ஒரு காஞ்சியையுடையது. பாடியபுலவர் எண்மர், பாட்டுடைத் தலைவர் அறுவர் மண்ணுலக வேந்தரும் ஒரு விண்ணுலகத் தேவனுமாவர். முருகு பொருநராற்றுப்படை, சிறுபாண், பெரும்பாண், கடாம் இவ்வைந்தும் ஆற்றுப்படைகள், புறப்பொருள் பற்றியவை; முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை இந் நான்கும் அகப்பொருள் பற்றியவை. மதுரைக் காஞ்சி நிலையாமையைச் செவியறிவுறுத்துவது; வீடு பேறடையத் தூண்டுவது. நக்கீரரும் உருத்திரங் கண்ணனாரும் தனித்தனி முறையே இரு நூல்களைப் பாடிய புலவர்கள். கரிகாலனையும் நெடுஞ்செழியனையும் முறையே இரு புலவர் பெருமக்கள் தனித்தனியே இரு நூல்களுக்குத் தலைவர்களாக அமைத்துள்ளார்கள்.

தமிழிலக்கியம் ஒருநாள் காலையில் அரும்பிப் போதாகி மலர்ந்த மலரன்று. மற்றைய நாட்டு இலக்கிய வளர்ச்சி முறை போல அதுவும் படிப்படியாக வளர்ந்து நிறைவெய்திய தொன்றுதான். தற்கால இலக்கியக் கண்கொண்டு முற்காலத்து இலக்கிய வளர்ச்சியை (Literary Progress)ப் பாகுபாடு செய்யுங்கால் தமிழ் இலக்கிய வளர்ச்சி வரலாறு நான்கு படிமுறைகளாக (Stages) வகுத்தற் குரியன. ஒருவகை இயற்கைக் காட்சியினின்றும் (Naturalistic) தோன்றிய பாடல்கள்; மற்றொருவகை ஒழுக்க அடிப்படையில் எழுந்த (Ethical or Didacti or Moralitic) பாடல்கள்; பிறிதொருவகை சமய அடிப்படையில் (Religious or Puranic) பிறந்த பாடல்கள். வேறொருவகை பகுத்தறிவு நிலையில் (Rationalistic) வெளிவந்த பாடல்கள். சங்க காலத்துப் புலவர்களெல்லாம் இயற்கையில் தோய்ந்து நின்று இயற்கையையே பாடற் பொருளாக (Theme) அமைத்துச் செய்யுட்களை யாத்தனர். அடுத்து வந்த சமணப் புலவர்களும் பௌத்தக் கவிஞர்களும் ஒழுக்

கத்திற்கு முதலிடம் நல்கி ஒழுக்கத்தையே பாடற்பொருளாக அமைத்துச் செய்யுட்களைப் புனைந்தனர். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் ஐம்பெருங் காப்பியங்களும் இந்நிலைச் செய்யுட்களுக்குச் சிறந்த சான்றுகளாகும். பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னும் பின்னுமுள்ள தெய்வநலக் கவிஞர்கள் புராணங்களையும் பன்னிரு திருமுறைகளையும் திவ்வியப் பிரபந்தங்களையும் திருவாய்மொழியையும் தமிழ் இலக்கியத்திற்கு நல்கினர். இஞ்ஞான்றுள்ள புலவர் மணிகளும் இலக்கியச் சிற்பிகளும் பகுத்தறிவிற்குத் தலைமையிடமளித்துச் செய்யுட்களைப் பாடி வழங்குகின்றனர்.

சங்ககாலத்துப் புலவர்கள் பார்க்குமிட மெங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் மலைகளையும், கடல்களையும், ஆறுகளையும், விலங்குகளையும், பறவைகளையும், புல்பூண்டு மரஞ்செடி கொடிகளையும் கண்கொள்ளாக் காட்சிகளாகக் கண்டனர்; இயற்கையோடு இயற்கையாய்த்தோய்ந்து நின்றனர்; இயற்கையின் நடுவண் வதிந்தனர்; இயற்கையில் உள்ளத்தைப் பறிகொடுத்தனர். அதன் விளைவாய் இயற்கையில் இயற்கைக் கவிதை பிறந்தது. அவர்கள் கவிதைகளில் முகில் துஞ்சும் மலைச்சிகரங்களும் (Cloud-clapped mountain peaks), இருளடைந்த காடுகளும் (Dark-forests), நீலவானங்களும் (Blue-Skies), நீர் நிறை ஏரிகளும் (Lakes full to the brim), தண்ணீர்மை குன்றாக் கடல்களும் (The inexhaustible seas), வெயிலுழைபு அறியாக் குயினுழை பொதும்பர்களும்(The impenetrable groves that know not 'Sun's rays), பூக்கள் பூத்துக் குலுங்கும் பூமரக்காக்களும் (The flower-ladden fruit gardens), விளைநிறை செல்வத்தால் புன்னகை முகங்காட்டி நிற்கும் மருதப்பண்ணைகளும் (The Smiling fields), பச்சைப்பசேலென்ற பைம்புற் பயிர்களும் (The ever-green meadows) வருணிக்கப்பட்டுள்ளன. அன்றியும் பொன்விளையும் புன்னையும் (The Gold-scattering Punna), செறிபணை மருதும் (The thick-branched Maruthu), சிறு இலைசந்தனமும் (The tiny-leaved Sandal), பொன்னணிநிற வேங்கையும் (The Gold.flowering Venkai), கொழுமலர்க் குமிழும் (The lush-flowered Kumil), நெடுஞ்சினை வேம்பும் (The long-branched Vembu), புல்லரை இரத்தியும் (The hard-barked Irrati), செழுங்காய் முதிர்பலவும் (The fruit-ladden Palavu), தேன்பாய்மராம்(The honey-flowering Maram), முள்ளரை இலவம் (The thorny-stemmed Ilavam), பொரிப்பூம் புன்கும் (The white-flowering Punku), கூடிணர்க் குராவும் (The flower-bunched Kura), புன்கால் நாவலும் (The slender-stemmed Naval), கொடிறுபோல் காய்தரு பாலையும் (The Palai tree with pincer-like fruits), குடக்காய் ஆசினியும் (The Asini tree as gil as a pot)

அவர்கள் செய்யுள்களில் இடம் பெற்றுள்ளன. அல்லாமலும் தீஞ்சொல் இளங்குயிலும் (The Sweet-voiced Kokilam), செவ்வாய்ப் பசுங்கிளியும் (The red-beaked green parrot), முழவொத்த பதங்கமும் (The drumming Padangam), இன்குரல் பூவையும் (The tender-voiced Poovai), தோகை மஞ்ஞையும் (The gandy-plumed Mayil), தூவி அன்னமும் (The soft-plumed Annam), கருங்கால் வெண்குருகும் (The black-legged white Crane), பல்பொறிக் கானவாரணமும் (The myriad-dotted Kanavaranam), கொடிறுதாங்கிய வாய்க்குழு நாரையும், (The Pincer-beaked Narai), இன்துணைபிரியா அன்றிலும் (The never to separate mate-loving Anril) அவர்களின் அரும்பாடல்களில் சொல்லோவியப்படுத்தப் பட்டுள்ளன. இவ் வர்ணனைகளெல்லாம் தீந்தமிழ்ச் சொற்களில் நடையழகு (Beauty of Style) தோன்ற வரையப் பட்டிருப்பதைத் தெரிந்துகொள்க.

இங்ஙனம் இயற்கையைச் செஞ்சொற் சீரடிகளில் யாத்துத் தந்த கடைச்சங்கத்து மேதக்கோர் உணர்ச்சி வயத்தோடு பல நடைநயந்தோன்ற பல வேறுபாடல்களையும் பிற்காலத் தமிழர்கள் ஆய்ந்து நலனெய்தும் வண்ணம் வெளிப்படுத்தியுள்ளனர். நடை புலவனுக்குப் புலவன் வேறுபடுமாப்போல் அவனவன் எடுத்துக்கொண்ட பொருள்களுக்கேற்பவும் வேறுபடுவதுண்டு. வரலாற்று நூலை எழுதுகின்ற அறிஞனின் நடை அரசியல் அறிஞனின் நடையினின்றும் வேறுபடும். செய்யுள் யாக்கும் புலவனின் நடையினின்றும் தத்துவ ஞானியின் (Philosopher) நடை வேறுபடும்; வீரம் பேசும் ஒருவனின் நடையினின்றும் அறம் பேசும் ஒருவனின் நடை மாறுபடும். இந்நடை வேறுபாடுகளெல்லாம் பிற்காலக் காவியங்களிலும் புராணங்களிலும் நனிதுலங்கக் காணலாம். உணர்ச்சி விகற்பங்களுக்கேற்பச் சந்தவேறுபாடுகளும் பிற்கால நூல்களில் காணலாம். சங்கச் செய்யுள்களில் சந்த வேறுபாடுகளும் ஓசைநயங்களும் அத்துணை அதிகமாகக் காணப் படவில்லையென்றாலும் சில உணர்ச்சி வேகங்களைச் சொல்வைப்பு முறையானும், போக்கானும் அவைகளைக் காண்டல் கூடும்.

“உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியு
மொருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு
மூத்தோன் வருக வென்னா தவரு
ளறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்

கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே"

"ஈன்று புறந்தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித் துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
யொளிறு வா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

என்ற இவ்விரு புறநானூற்றுச் செய்யுட்களை உற்று நோக்குமின், சொற்போக்கு நெறியையும் ஓர்மின். எத்துணை எளிய சொற்கள்; இனிய சொற்கள், எவ்வளவு பொருட்டெளிவு இவைகளில் காணப் படுகின்றன. சொற்கள் ஒன்றை ஒன்று ஈர்த்துச் செல்கின்ற பண்பைப் பாருங்கள். இவை சங்கச் செய்யுட்களே யாயினும் பொருள் நயம் புலப்படுத்த நிகண்டு தேவையில்லை, சிந்தனைக்கும் வேலையில்லை, படித்த மாத்திரத்தானே பொருள் விளக்கம் பெறுதல் ஒருதலை. அடுத்து,

"உண்டா லம்மவிவ் வுலக மிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே"

என்ற இச்செய்யுளையும் சிறிது உன்னிப்பாருங்கள்; நடையழகைக் கருதிப்பாருங்கள். கருத்துக்கள் ஒன்றை ஒன்று பின்பற்றிச் செல்லும் சங்கிலித்தொடர்நெறியைக்கூர்ந்துநோக்குங்கள். கருத்துக்கள் பல இணைக்கப்பட்டுள்ளன. ஆனால் அக்கருத்துக்கள் ஒன்றை ஒன்று இடைவிடாது தொடர்ந்து செல்லுகின்றன. சொற்போக்கின் சீலமே அச்செய்யுளை நடையழகின் உச்ச நிலைக்கு இழுத்துச் செல்கின்றது. ஓர் அடியின் வினைமுடிவு அடுத்த அடியினை ஈர்த்துப் பிணைக்கின்றது; ஆற்றொழுக்குடையது.

"யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனு
மல்லவை செய்யான் காக்கு மதன்றலை

யான்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே"

என்ற பிசிராந்தையாரின் வாய்மொழியும்,

"இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ளோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்று
முண்டாயிற் பதங் கொடுத்
தில்லாயி னுட னுண்ணு
மில்லோ ரொக்கற் றலைவ
னண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே"

என்ற தமிழ்க் கிழவி ஔவையின் தூதுமொழியும் வினவி னோர்க்குச் சுடச்சுட விடைபகர்வது போல அமைந்துள்ள சொன்னெறியைப் பல்கால் சிந்தித்து உவகை கொள்மின். வகுப்பறையில் வினக்கேட்ட ஆசிரியர் எதிர்பாராவண்ணம் மாணவன் ஒருவன் விடையறிவேன் என்ற மதிவன்மையால் தன் இறுமாப்புத் தோன்றப் பதிலுரைப்பான் போன்று அப்பாடல்கள் எழுந்த ஐயத் திற்கும் விடுத்த கேள்விக்கும் பதிலுரைப்பதைப் படித் தின்புறு மின். இடத்திற்கேற்ற சொன்னடை இச்செய்யுள்களில் காணப் படுவதைப் பலதடவை படித்துச் சுவைத்து உட்கொள்மின்.

"சிற்றி னற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினு மறியே னோரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
வீன்ற வயிறோ விதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே"

என்ற காவற் பெண்டின் பாட்டை நனிசிந்தியுங்கள். என்னே! இத்தாயின் வீரமொழி. 'தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே' என்ற அச்சமிலா விடையை யார்தான் இயம்ப இயலும்! அவ்வீற்றடியே அப்பாட்டின் உயிர்நிலையடி. அவ்வடியிலுள்ள சொற்போக்கு எவ்வித வுணர்ச்சியை எழுப்புகிறது; எவ்வகை வேகத்தை ஊட்டுகிறது என்பதைச் சொல்லிச் சொல்லி நுகருங்கள். அவ்வடி அவ்வீரத்தாயின் மறநெஞ்சத்தையும் எஞ்சாத் தேசபக்தியையு மன்றோ புலப்படுத்துகிறது; சொல்லால் வீரத்தைத் தூண்டுவதன்றோ!

(தொடரும்)

# தொண்டு செய்க

[திரு. புலவர், 'அரசு' அவர்கள்]

1. எய்தற் கரிதான இப்பிறப்பை எய்தினீர்
செய்தற் குரியன செய்ம்மினி—உய்தற்(கு)
அதுவே வழியாம்; பின் ஆகாது; செவ்வே
எதுவேண்டு மஃதியற்று மின்.

2. தொண்டுசெய் வோர்முதலில் தூய்மை தமையாக்கிக்
கொண்டுபின் தொண்டு குறிக்கொள்க;—மண்டுநோய்
தீர்க்கும் மருத்துவன்தற் சீர்ப்படுத்திக் கொள்கிலனேல்
தீர்க்குவனோ மற்றவர்நோய் தேர்ந்து?

3. தன்னலத்தைச் சுட்டெரித்துத் தாழ்வாம் உளப்பான்மை
என்னதூஉம் இல்லான் எடுத்தெறிந்து—முன்னடப்போன்
தொண்டு செயற்குரிய தோன்றலா வானென்றே .
கண்டுகொளல் நந்தங் கடன்.

4. பற்றுவிட்ட தூயவனே பாருக்குத் தொண்டு செயல்
நற்றமென எண்ணுமின்; நாடுறின்—பற்றுடையோன்
தன்னலத்தை நீக்க கிலான்; தாக்குமவ னையஃது;
புன்னலத்தில் வீழ்வானூற் போந்து.

5. உலகமே தன்குடும்பம் என்றெண்ணும் ஊற்றம்
நலமெய்த் துறவிக்கே நந்தும்—விலகலிலாத்
தன்குடும்பம் வாடலுறத் தான்பிறர்க்குத் தொண்டுசெயல்
புன்கொடுமை யன்றோ? புகல்.

6. உள்ளத்தாற் பொய்யா தொழுகி யுலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளரான—வள்ளற்
பெருமானார் காந்தியார் பெற்றிமைநன் கோர்மின்
ஒருவாம லுள்ளத்து ளூற்று.

7. அன்னைகத் தூரிபாய் போல அகமகிழ்ந்து
தன்கணவ னோடு தரும்பணிசெய்—பொன்னனையாள்
வாழ்க்கைத் துணைவியாம் மாண்புற்றோன் தன்மனையோ(டு)
ஆக்கலாம் நாட்டுத்தொண் டார்ந்து.

8. நாட்டுப் பணிக்குப் பொருளீட்டின் நாடியதில்
வீட்டுக்கு மாம்பொருள் மேற்கொள்ளும்—தேட்டமெலாம்
மெய்த்துறவி கொள்ளான்மன் மேவும் மனைமக்கள்
எய்த்துறினும் எட்டுணையு மே.

9. தென்னாப் பிரிக்காவில் காந்தியார் செய்தொண்டால்
பொன்னார் பணியும் புனைவயிர—மின்னார்
கலனும் பரிசாகக் கைவந்த வேனும்
நலனன் றெனநீத்தார் நன்கு.

10. அன்புறு மக்கள் அனைவரும் நற்பரிசாப்
பொன்கலன் தந்தவற்றைப் புந்தியுற—நன்கறிந்து
மக்கள் பணிக்கு வளர்நிதியம் ஆக்கினார்
தக்கஅறி ஞர்காந்தி தாம்.

11. கத்தூரி பாவின் கழுத்தணிய வேமக்கள்
கொத்தாகப் பொன்ளுரங் கூர்ந்தளித்தார்—உய்த்தாய்ந்த
காந்தி யடிகள் கழற்றிஞர் தொண்டினுக்கே
வாய்ந்த பரிசென்று மன்.

12. பண்புறு தம்மனையார் கத்தூரி பாவணிந்த
கண்பெறு பல்கலனுங் கைக்கொண்டே—எண்பெறும்
மக்கள் பணிக்காக்கி வைத்தருளுங் காந்தியார்
தக்க உளத்தகவு காண்.

13. சுடச்சுடரும் பொன்போ லொளிபெறுவான் துன்பஞ்
சுடச்சுடத் தொண்டியற்றுந் தூயோன் நடக்கையிலே
எல்லோரை யுந்தன் இனியநன் மக்களென
நல்லோன் நினைப்பான் நயந்து.

14. பொய்யுரையான் காமத்தாற் பொன்றிடான் மக்களெலாம்
உய்யச் சமநெறியில் ஓங்கிநடந்—தையமிலா
எவ்வகையி னுலும் இயலும் பணிபுரிவான்
செவ்வகைத் தொண்டனெனச் செப்பு.

15. எஞ்சாமல் தீமை யியற்றுவோர் யாவரெனும்
அஞ்சாமற் சுட்டி யதைக்காட்டும்— துஞ்சாத
வீரம் உடையவனே மேவுவான் தொண்டனென
ஓரம் இலாமலவண் உற்று.

16. நன்றுதீ துற்றுணர்வோம் நாமெலாம் என்றுலும்
பொன்றுறுந் தீமை புரிகுநரை—ஒன்றியிது
நன்றன் றெனத்தடுக்க வல்லோமோ? வல்லோமேல்
ஒன்று பணிக்காவோம் ஓர்ந்து.

17. எளியாரைத் துன்புறுத்தும் ஈரமிலார் தம்மை
அளியாகா தென்றே அறைந்து—துளியேனும்
அஞ்சா தவர்தீமை யாவுமக லத்தடுப்போன்
எஞ்சாத தொண்டனென் பேம்.

18. அருளுள்ளமும் ஆன்றமைந்த கல்வி யறிவும்
தெருளுந் திறனுந் தெரியின்—மருளிலாத்
தொண்டியற்றுந் திண்மையுந் தூயநடை யுங்கொண்டே
தொண்டனெனச் செப்பலாஞ் சூழ்ந்து.

19. உலகிற் பிறந்துழன் றேய்ந்து கெடுவேம்
நலமறியேம் ஏதுமிவண் நாடின்—உலகிற்கு
நம்மால் இயல்பணி நாடிப் புரிந்திடுவேம்
சும்மா விழாமலே சூழ்ந்து.

20. சோர்வின்மை, ஊக்கம், துணிவு, மனத்தூய்மை,
ஆர்வம், அமைதியுடன் ஆராய்ந்து—தேர்வுறாஉம்
சூழ்ச்சி இனையவெலாந் தொண்டர்க்கு வேண்டுமால்
தாழ்ச்சியிலா நற்பணிக்குத் தான்.

# எதிர்மறையிடைநிலை யாராய்ச்சி

[பண்டித, வித்துவான். திரு. தி. சங்குப்புலவர்]

(செல்வி சிலம்பு ௩௬, பரல் ௧0, ௪௬௫ ஆம் பக்கத் தொடர்ச்சி)

## தன்மை வினைமுற்று ஒருமை

| உடன்பாடு | எதிர்மறை |
|---|---|
| உண்பல், உண்பன், உண்பென், உண்பேன் | உண்ணேன் |

தன்மை யொருமை வினைமுற்றுக்குரிய அல் அன், என் ஏன் என்ற விகுதிகளில் ஏன் என்ற விகுதியே எதிர்மறைக்கு வருகின்றது உண்ணேன் என்ற ஒன்றே எதிர் மறைப்பொருளைக் காட்டுகின்றது. உண் + ஆ + ஏன் என்று நடுவில் ஆ என்ற இடைநிலைபுணர்ந்து நின்று பின் கெட்டது (மறைந்தது) எனக் கொள்ளவேண்டும்.

## தன்மைப் பன்மை வினைமுற்று

| உடன்பாடு | எதிர்மறை |
|---|---|
| உண்பம் | |
| உண்பாம் | உண்ணும் |
| உண்பெம் | |
| | உண்ணேம் |
| உண்பேம் | |
| உண்போம் | உண்ணோம் |

தன்மைப் பன்மை வினை முற்றுக்களுக்குரிய விகுதிகளாகிய அம், ஆம், எம், ஏம், ஓம் என்பவற்றில், ஆம், ஏம், ஓம் என்ற மூன்றுமே யெதிர் மறை வினைமுற்று விகுதிகளாக நிற்கின்றன. அம் எம் என்ற இரண்டும் எதிர்மறையில் வாரா. எதிர்மறைப் பொருளை விகுதியே காட்டுமா என ஆய்ந்தால் அவ்விகுதி உடன் பாட்டிலும் வருகின்றது. உடன்பாட்டினை யுணர்த்தும் விகுதி எதிர்மறையையும் உணர்த்துகின்றது, என்று கூறுவது பொருத்தமின்று. விகுதியே எதிர்மறைப் பொருளையும் காட்டும் என்று கூறுவதும் பொருந்தாது. விகுதிபால் காட்டும் என்பதே பொருந்தும். ஆதலால் ஆங்கும் ஆ என்ற இடைநிலை நடுவிற் புணர்ந்து கெட்டது என்றே கொள்க.

## முன்னிலை வினைமுற்று (ஒருமை)

| உடன்பாடு | எதிர்மறை |
|---|---|
| உண்ணுதி | |
| உண்டை | |
| உண்பாய் | உண்ணாய் |

முன்னிலை யொருமைக் குரிய இ ஐ ஆய் என்ற விகுதிகளில் ஆய் என்ற விகுதியே எதிர்மறைக்கு வருகின்றது. உண் + ஆ + ஆய் = உண்ணாய் என ஆகார விடைநிலை நடுவில் மறைந்தது என்பது பொருந்தும்.

## முன்னிலை வினைமுற்று (பன்மை)

| உடன்பாடு | எதிர்மறை |
|---|---|
| உண்ணுதிர் | |
| உண்ணுவீர் | உண்ணீர் |
| உண்ணும் | |

முன்னிலை வினைமுற்றுக்குரிய விகுதிகளில் ஈர் என்ற விகுதி ஒன்றே எதிர்மறை வினைமுற்றுக்கு வருகின்றது. இதனைப் பிரித்தால் எதிர் மறை காட்டும் இடைநிலை நடுவில் இல்லை. உண் + ஆ + ஈர் என்று நிறுத்தி நடுவில் உள்ள ஆகாரம் மறைந்தது என்றே கொள்ளல் வேண்டும்.

## படர்க்கை ஐம்பால்

| உடன்பாடு | எதிர் மறை |
|---|---|
| உண்பன், உண்பான் | உண்ணான் |
| உண்பள், உண்பாள் | உண்ணாள் |
| உண்பர், உண்பார் | உண்ணார் |
| உண்பது | உண்ணாது |
| உண்பன | உண்ணா |

இங்குக் காட்டிய எதிர்மறை வினைமுற்றுக்கள் ஐந்தும் ஆகார விகுதி நடுவிற் புணர்ந்து கெட்டது என்று கூறுவதற் கேற்ற முறையில் ஆன், ஆள், ஆர், ஆ என்ற விகுதிகளைக் கொண்டு நிற்கின்றன. உண் + ஆ + ஆன் = உண்ணான் என்பது

போல, உண்+ஆ+ஆள், உண்+ஆ+ஆர், உண்+ஆ+ஆ என்பனவும் ஓர் ஆகார ஒலி அடுத்து நின்ற ஆகார வொலியுடன் சேர்ந்து மறைந்தது. "அத்தினகர மகரமுனையில்லை" என்ற சூத்திரவிதிப்படி அகரம் 'அகரத்தின் முன் னில்லாமல்' மறைந்தது போல ஆகாரத்தின் முன் ஆகாரம் மறைந்தது என்று கூறுவது மிகவும் பொருத்தமாம்.

சேனாவரையர் காட்டியபடி (தொல்காப்பியம் வினையியல் 39 ஆம் நூற்பாவுரை) உண்டிலன், உண்ணாநின்றிலன் உண்ணலன், உண்ணான், உண்ணாது என்ற சொற்களில் இல், அல், ஆ என்ற மூன்றிடை நிலைகளும் நிற்கக் கண்டோம். அவற்றையே யாதாரமாகக் கொண்டு எதிர்மறை யிடைநிலை இல், அல், ஆ என்ற மூன்றுமே எனத் துணிவோம். அல், இல், ஆ எதிர் மறைவினைச் சொற்களில இருந்தாற் பிரித்துக் காட்டுவோம். இல்லையெனில் இடையில் மறைந்து நின்று எதிர் மறைப்பொருளைக் காட்டியது எனக் கூறுவோம்.

"அ ஆ ஈற்ற பலவின் படர்க்கை
ஆவே யெதிர்மறைக் கண்ணதாகும்"

என நன்னூலார் ஆ என்ற விகுதியே யெதிர்மறையைக் காட்டும் என்ற பொருள் தோன்றக் கூறினர் எனினும் ஆ என்பது பலவின்பாற் படர்க்கை விகுதி என்பதுதான் பொருந்தும்; எதிர்மறையைக் காட்டும் என்றல் பொருந்தாது. விகுதி, பால் காட்டுமேயன்றி எதிர்மறையை எங்ஙனம் காட்டும்? காட்டுமெனில் எல்லா விகுதிகளுங் காட்டவேண்டுமன்றோ? ஒன்று காட்டும் ஒன்று காடடாது என்று கூறல் குற்ற மன்றோ? ஆதலால் ஆ என்ற விகுதி பால்காட்ட எதிர்மறை யிடைநிலை மறைந்தது என்று சொல்வதே தக்கதாம்.

"பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்"

என்ற குறளில் முன்னின்ற "எனல்" எதிர்மறைப் பொருளையுணர்த்தியது. பின்னின்ற "எனல்" எதிர்மறையைக் காட்டும் என்றல் பொருந்தாது. சொல் ஒன்று உடன்பாட்டினையும் எதிர்மறையையும் உணர்த்தியது எனபது எங்ஙனம் பொருந்தும்? எதிர்மறைப் பொருளையுணர்த்தும்போது அதற்குரிய இடைநிலை புணர்ந்து கெட்டதாகக் கூறுவதே பொருத்தமாம். முன்னின்ற எனல் என்ற சொல்லை என்+அல்+அல் என்று பிரிதது நடுவில் நின்ற அல் மறைநதது என்று கூறின் இழுக்கொன்று மின்று. செய்யுளாதலால் மறைந்து நின்றது என்க.

“கெடுவாக வையா துலகம்” என்ற குறளில் “கெடு” என்ற சொல்லை விகுதிகுன்றிய தொழிற்பெயர் என்கின்றோம். நடப்பாய், உண்பாய் என்பனபோல வரும் ஏவல் வினைமுற்றுக்கள் நட, உண் என்று நின்று ஏவற்பொருளையுணர்த்தியபோது அச்சொற்களை விகுதிகுன்றிய ஏவல் வினைமுற்று என்கின்றோம். இதுபோலவே எதிர்மறைப்பொருளை யுணர்த்தும் சொற்கள் இடைநிலையின்றி நின்றால் அவற்றை இடைநிலை குன்றிய எதிர்மறை வினைமுற்று என்கிறோம். வினைச்சொற்கள் எதிர்மறைப் பொருளைக் காட்டும்போது இடைநிலை நடுவில் நின்றாற் பிரித்துக் காட்டுக. இல்லையெனில் இடைநிலை மறைந்து நின்றது குன்றியது, என்று கூறுவதே பொருத்தமாம்.

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து என்ற விகுதிகளையுடைய தொழிற்பெயர்கள் எல்லாம் எதிர்மறை யிடைநிலை நடுவிற் புணர்ந்து எதிர்மறை காட்டுவதின்று. அவ்விகுதிகளில் மை விகுதி நின்று நடுவில் எதிர்மறை ஆகாரம் புணர்ந்தே எதிர்மறைப் பொருளைக் காட்டுகின்றது. அழுக்காறாமை, அழியாமை, செய்யாமை, கல்லாமை, கள்ளாமை, சேராமை, நிலையாமை, சொல்லாமை, விழையாமை, பிழையாமை, பொச்சாவாமை, வெருளாமை, வெஃகாமை போல்வன காண்க. அழுக்காறு + ஆ + மை, அழி + ஆ + மை எனப் பிரித்துப் பகுதி, எதிர்மறை யிடைநிலை விகுதி முறையே நிற்பன அறிக: மை விகுதியை யொழித்து மற்றை விகுதிகளோடு சேர்த்து எதிர்மறைத் தொழிற்பெய ராக்க இயலாது என்பதும், மை விகுதியைக் கூட்டி உடன்பாட்டுத் தொழிற் பெயராக்குவதும் இயலாது என்பதும் உணர்க. அழுக்காறு + மை = அழுக்காறுமை; அழி + மை = அழிமை என்று புணர்க்கக் கூடுமோ? கூடாது. மை விகுதி தொழிற் பெயரில் எதிர்மறைக்கே வரும்; உடன்பாட்டில் வராது. உண்டமை உண்கின்றமை என இறந்தகாலம் நிகழ்காலங்காட்டும் இடைநிலைகளோடு புணர்ந்து உடன்பாட்டுத் தொழிற் பெயராய் நிற்கும்; து விகுதி உண்டது, உண்கின்றது, உண்பது என்று முக்கால விடைநிலைகளோடுங் கூடியே தொழிற்பெயர் ஆகும். தனியே பகுதியுடன் மை விகுதி, து விகுதி கூடிநின்று தொழிற் பெயராதல் இன்று. பொருந்தும் விகுதிகளையே கொள்ளவேண்டும். பொருந்தா விகுதிகளைப் பகுதிகளோடு சேர்த்தல் இலக்கணமாமோ! இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் என்பதை ஆய்ந்துணர்ந்துகொள்க.

ஆ என்ற இடைநிலைதான் மறைந்து நின்று அப்பொருளைக் காட்டுகின்றது. அல், இல் என்பன மறைந்து நின்று ஒவ்வோரிடங்

களிற் காட்டுவதும் உண்டு. ஆ என்பதும் நெடில் முதலாகிய விகுதிகள் வரும்போதுதான் மறைகிறது. உண் + ஆ + ஆன், உண் + ஆ + ஆள், உண் + ஆ + ஆர், உண் + ஆ + ஆ, உண் + ஆ + ஏன், உண் + ஆ + ஆம், உண் + ஆ + ஏம், உண் + ஆ + ஓம், உண் + ஆ + ஆய், உண் + ஆ + ஈர் - முறையே உண்ணான், உண்ணாள், உண்ணார், உண்ணா, உண்ணேன், உண்ணாம், உண்ணேம், உண்ணோம், உண்ணாய், உண்ணீர் என நெடில் முன்னுள்ள விகுதிகள் வந்தபோதே மறைந்து நிற்பன காண்க. உயிர் நெட்டெழுத்தொலி ஒன்றனுள் ஒன்று மறைந்து பிரிந்து தோன்றாத காரணத்தால் அவ்வொலிவடிவிற்கேற்ப வரி வடிவு வரைந்து காட்டினர் எனக் கொள்க.

> "இல் அல் ஆ இவை யெதிர்மறை யிடைநிலை
> ஆ நடு மறையினு மப்பொருள் காட்டும்"

என்பது விதி.

ஆசிரியர் தொல்காப்பியரும் பவணந்தி முனிவரும் எதிர் மறை யிடைநிலை கூறாது விடுததனர் என்பதும், உரையாசிரியர் எடுத்துக் காட்டிய மேற்கோள்களாலும் பல இலக்கிய வாயிலாக வும் எதிர்மறைவினையும் அப்பொருளுணர்த்தும் இடைநிலையும் கண்டோம் என்பதும், அவை அல், இல், ஆ என்ற மூன்றே என்பதும், அல், இல் பெரும்பாலும் மறைந்து நிற்பதின்று என்பதும், ஒவ்வோரிடங்களில் அருகி மறைந்து நிற்பதும் உண்டு என்பதும், ஆவே மறைந்து நிற்கும் இடைநிலை என்றும், ஆ உயிர் நெடிலாதலால் அதுபோன்ற நெடில் வரும்போது மறைவதியற்கை என்பதும், மறைந்து நின்றாலும் புணர்ந்து கெட்டதாகவே கூறுவதுதான் பொருத்தமாகும் என்பதும், தொழிற்பெயர் பல விகுதிகளை யுடையதாயினும் அப்பெயர்க் குரிய விகுதிகள் எல்லாம் எதிர்மறைப் பொருள் காட்டுமிடத்து வாரா என்பதும், எதிர்மறைப் பொருள் காட்டுமிடத்து "மை" என்ற விகுதியே வரும் என்பதும், எதிர்மறை யிடைநிலையாகிய ஆ என்பது நடுவில் நிற்க இறுதியில் மை என்பது நின்று எதிர் மறைப் பொருளைக் காட்டும் என்பதும், மை விகுதி உடன் பாட்டிற்கு வாராது என்பதும், காலங்காட்டும் இடைநிலைகளோடு கூடியே வரும் என்பதும், எதிர்மறைப் பொருளை யுணர்த்தியது விகுதி என்று கூறுவது பொருந்தாது என்பதும் பிறவும் ஆய்ந்த முடிவாகும்.

# செய்திகளும் குறிப்புக்களும்

## (க) வடநாட்டில் தென்னக மொழிகள்

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய தென்னிந்திய மொழிகளில் ஏதாவதொன்றை உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்றுவிக்க உத்தரப்பிரதேச அரசினர் இசைந்துள்ளனர் என்றும்; பீகார், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான ஆகிய மாநிலங்களிலும் ஆங்கிலத்தோடு தென்னிந்திய மொழிகளில் ஒன்றைப் பயிற்றுவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இந்திய உள்நாட்டமைச்சர் திரு. தத்தார் அவர்கள் சென்ற திங்களில் மக்கள் மன்றத்தில் அறிவித்துள்ளார்.

**குறிப்பு :** இது மிக நல்ல திட்டம். இதனால் பொதுவாக நாட்டு ஒருமைப்பாட்டுக்கும், சிறப்பாகத் தென்னக மொழிகளின் சிறப்பு இவ்விந்தியத் துணைக்கண்டமெங்கணும் பரவ வாய்ப்பும் வசதியும் கிட்டும் என நம்புகிறோம். ஆனால் நடைபெறுமா என்பது ஐயமே.

## (உ) அமெரிக்காவில் திருக்குறள் !

அமெரிக்காவில் பெரும்பாலான பல்கலைக் கழகங்களில் திருக்குறள் கற்பிக்கப்படுகிறதென அங்குச் சென்றுவந்த திரு. சிவாஜி கணேசன் அண்மையில் தெரிவித்தார்.

**குறிப்பு :** வெல்க குறள் நெறி !

## (ங) எகிப்து நாட்டில் திராவிட நாகரிகச் சின்னங்கள்

"இந்தியப் புதைபொருள் ஆராய்ச்சி வல்லுநர்கள் குழுவொன்று அண்மையில் எகிப்திலுள்ள நூபியாவில் ஆராய்சசிகள் நடத்திச் சில புதைபொருள்களைத் தோண்டி எடுத்திருக்கிறார்கள் இந்தப் பொருள்களுக்கும் தென்னிந்தியாவில் புதைபொருள் ஆராய்ச்சி மூலம் கண்டு பிடிக்கப்பட்ட பொருள்களுக்குமிடையே அதிகமான ஒற்றுமை இருக்கிறது" என்று அண்மையில் இந்திய விஞ்ஞான, ஆராய்ச்சிப் பண்பாட்டுத்துறை அமைசசர் பேராசிரியர் உமாயூன் கபீர் தெரிவித்தார்.

**குறிப்பு :** திராவிட நாகரிகம் ஒரு காலத்தில் எகிப்து வரை பரவியிருந்தது என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறும் கூற்றுக்கு இச்செய்தி அரண் செய்வதாகும்.

## (ச) பார்வை இழந்தவர் பட்டம் பெற்றார் !

சென்னைக் கிறித்துவக் கல்லூரி மாணவர் அந்தகரான ஜி. செயராமன் என்பவர் கடந்த மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற பல்கலைக் கழகத் தேர்வில் இரண்டாம் வகுப்பில் எம். ஏ., பட்டம் பெற்றார். வினாக்களைச் செவிவழி கேட்டு விடைதருதற்குப் பல்கலைக்கழகத்தார் இவருக்கு வேண்டிய வசதிகள் செய்து தந்தனர்.

**குறிப்பு :** 'கண்ணுடையர் என்பவர் கற்றோர்' என்னும் பொய்யா மொழி எண்டு நினைவு கூர்தற்குரியது. புறக்கண் இழந்த இவர் முயன்று கல்வி கற்று அகக்கண் பெற்றது பாராட்டற் குரியது. மேலும் இந் நிகழ்ச்சி கல்விச் செல்வத்தின் இன்றியமையாமையை நன்கு வலியுறுத்துவதாகும். வளர்க கல்வி !

(ரு) **பேசாமடந்தை பேசிய புதுமை!**

பாலக்காட்டைச் சேர்ந்த 21 அகவையுடைய வேதம்மாள் என்னும் பெண் கடுங் காய்ச்சலின் விளைவாக 16 திங்கள்கட்கு முன்பு பேசும் ஆற்றலை இழந்துவிட்டாள். பலவித உயர் மருத்துவங்கள் செய்தும் பயனில்லாமற் போயிற்று. இறுதியில் அவள் பெற்றோர் குருவாயூர் இறைவன் திருமுன் சென்று ஒரு திங்கள் தொடர்ந்து வேண்டுகோள் பதிகங்கள் பாடி இறைஞ்சினர். அதன் பயனாகக் கடந்த 27-6-62 இல் அப் பெண் வாய்திறந்து பேசத் தொடங்கினாள். 'நாராயணா' என்று உச்சரித்தாள்.

**குறிப்பு:** வேண்டுகோள் பதிகங்கள் பாடி வேண்டுவன வேண்டும் வண்ணம் எய்தலாம் என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு.

(சு) **மனமிருந்தால் வழியுண்டு**

"தமிழை அரசியலுக்குப் பயன் படுத்தாமல் தமிழ்ப்போதனாமொழி வகுப்புக்களில் அதிகப்படியாகச் சேரும்படி மாணவர்களிடையே பிரசாரம் செய்வது நல்லது" என்று 9 7-62 இல் நடைபெற்ற சட்ட மன்றத்தில் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் தமிழ் பயிற்று மொழி பற்றிய பல வினாக்களுக்கு விடையளிக்கையில் கூறினார்.

**குறிப்பு:** இந்நாட்டில் ஆங்கில ஆட்சி நிலவிய காலத்தில் ஆங்கிலம் பயிலும்படி பிரசாரம் செய்வது நல்லது என்று எந்த ஆங்கில அமைச்சரும் கூறவில்லை. ஆயினும் ஆங்கிலம் தனியாட்சி செலுத்திற்று. இஃது ஏன்? எப்படி? என்பவைகளை நம் தமிழக அமைச்சர்கள் சற்று ஆராய்ந்து பார்த்து அவ் வழியைக் கடைப்பிடிப்பார்களாக. மன மிருந்தால் வழியுண்டு!

---

## சைவசித்தாந்த சாத்திர வகுப்புக்கள்

அறநிலைய ஆணையாளர் நன்முயற்சியான் அமையப்பெற்ற 'சித்தாந்த வகுப்புக் குழுவினரால்' சென்னையிற் பல பேட்டைகளில் முறையாகத் தக்க சான்றோர்களைக்கொண்டு பல வகுப்புக்கள் நிகழ்ந்துள்ளன.

அம்முறையில் 29—7—62 இல் மாலை 6-30 முதல் 8-30 வரை மினர்வா கூடத்தின்கண் (ஹால்ஸ் வீதி, எழும்பூர், சென்னை-8) 6. 'கொடிக்கவி' என்னும் பொருள் குறித்து ஆசிரியர் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை (பி.ஏ. எல்.டி., ஓய்வுபெற்ற கல்வியதிகாரி) அவர்கள் வகுப்பு நடத்துவார்கள்.

30—7—62இல் மாலை 6½—8½ மணிவரை டாக்டர் B. நடராசன், எம். எல். ஏ. அவர்களாலும், 31—7—62 மாலை 6½—8½ மணிவரை டாக்டர் V. A. தேவசேனாபதி எம். ஏ. பி.எச்.டி.. அவர்களாலும் சித்தாந்தச் சொற்பொழிவுகள் நடைபெறும்.

செந்தமிழ் அன்பர்களும் செந்நெறிச் செல்வர்களும் இன்றியமையாது சென்று செவியுற்றுச் சிறந்த பயன் எய்துவார்களாக.

---

# மதிப்புரை

"பழந்தமிழ்"

ஆசிரியர்: பேராசிரியர் திரு. இலக்குவனார், எம். ஏ., எம். ஓ. எல. கிடைக்குமிடம்: வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை. பக்கங்கள்: ௨௫௬, விலை ரூ. 4 00.

உலகத்தில் முதன்முதலாகத் தோன்றிய மொழிகளுள் தமிழ் ஒன்று என்பதும், பழமை சான்ற இலத்தீன், கிரீக்கு, வடமொழி முதலிய மொழிகள் வழக்கிறந்து போகத் தமிழ்மட்டும் பழமைக்குப் பழமையாயும் புதுமைக்குப் புதுமையாயும் திகழ்ந்து பேச்சுவழக்கில் நிலைபெற்று வருகிறது என்பதும், இக்கால ஆங்கிலத்தைப் போலவே சொற்செல்வ வளம் படைத்தது தமிழ் என்பதும், ஆரியர் வருகைக்கு முன்பே இந்தியநாடு முழுவதும் பரவியிருந்தது தமிழே என்பதும், இந்தியப் பண்பாட்டிற்கு ஊற்றுக்கண்ணாயிருப்பது தமிழே என்பதும், இன்னோரன்ன உண்மைகள் பலவும் பிற நாட்டினராலும் இந்நாட்டின் பிற மாநிலத்தவராலும் அறியப்பெறாமல் உள்ளன. ஏன், தமிழைத் தாய்மொழியாகப் பெற்றவரே தமிழின் பழமைச் சிறப்பை உள்ளவாறுணராதிருக்கின்றனர். அப் பெருங் குறையைப் போக்குதற்கு எழுந்ததே 'பழந்தமிழ்' என்ற இந்நூலாகும்.


மொழிநூலடிப்படையில் ஆராய்ச்சி செறிந்த நூலாக இதனை ஆக்கியளித்திருக்கும் பேராசிரியர் அவர்கள் சிந்துவெளிப் பகுதியில் காணப்பட்ட தமிழ்ச் சொற்களையும் (பக்கம் ௬௮), ஆரியம் தமிழினின்று கடன்பெற்ற சொற்களையும் (பக்கம் ௫௩) எடுத்துத் தொகுத்துத் தந்துள்ளார். பழந்தமிழ் இலக்கியமாக நமக்குக் கிடைக்கும் தொல்காப்பியம், சங்க இலக்கியம் இவற்றின் துணைகொண்டு அக்காலத் தமிழ் எவ்வாறு விளங்கியது என்பதை விளக்கியுள்ளார் (பக்கங்கள் ௬௧-௮௩; ௧௩௧-௧௬௫.) அறிஞர் கால்டுவெல் அவர்களின் ஆராய்ச்சியடிப்படையில் நின்று பழந்தமிழினின்றே தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய பிற திராவிடமொழிகள் தோன்றின என்பதை நூலின் ஐந்தாம் தலைப்பில் நிலையுறுத்துகின்றார். மேலும் பழந்தமிழ்ச் சொல்லமைப்பைப் பற்றியும், பழந்தமிழ் எழுத்துக்களைப் பற்றியும், தமிழைப் படைத்த தமிழரின் பழம் பண்பாட்டைப் பற்றியும், தமிழின் மறுமலர்ச்சி பற்றியும் தனித்தனிப் பகுதிகளில் ஆராய்ந்து பல உண்மைகளை உணர்த்தியிருக்கின்றார்.

பழந்தமிழைப் பற்றியும், சங்கத்தமிழைப் பற்றியும் எவ்வளவோ விரிவாக ஆராய்தற்கு இடமுண்டு. அவ்வகை ஆராய்ச்சி நம் நாட்டில் பெருகுவதற்கு இந்நூல் மிகுந்த துணைபுரியும்.

இந்நூலின்கண் பலவிடங்களிலும் இந்நூலாசிரியர் வையாபுரிப் பிள்ளையின் கருத்துக்களை ஆங்காங்கே உணர்ச்சிப் பெருக்குடன் மறுத்திருப்பது கவனிக்கத்தக்கது. இந்நூல் ஆங்கிலத்திலும் இன்னும் விரிவாக எழுதப்பட்டு வெளிவருதல் மிக இன்றியமையாதது. —மு. ச.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை, 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.

மறைமலையடிகள் கலைமன்றத் திறப்பு விழா—12-7-1962





மதுரை ஆதீனம் சோமசுந்தர அடிகளார், வ, சுப்பையா, நிதியமைச்சர் எம். பக்தவத்சலம்.




நிதியமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்கள்
கலைமன்றத்தைத் திறப்பது



நிதியமைச்சர் கலைமன்றக் காட்சிப் பொருள்களைப் பார்ப்பது




உயர்நீதிமன்ற நீதிபதி சு. கணபதியா பிள்ளை நிதியமைச்சரிடம்
அடிகளார் கையெழுத்துப் படியைக் காட்டுவது



வ. சுப்பையா பிள்ளை வரவேற்புரை நிகழ்த்துவது



விழாத்தலைவர் (மதுரை யாதீனம்)
மறைமலையடிகளார் உருவப்படத்தைத் திறப்பது



நிதியமைச்சர் திறப்புரை நிகழ்த்துவது